— Page - 209 -
...UPADHYAYA ... LIBRA... BESANT NAGAR ... MADRAS-...

# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர் : 14 | சுபகிருதுஸு ஆவணிமீ | வருட சந்தா |
| இதழ் : 5 | ஆகஸ்ட்—செப்டம்பர் 1962 | ரூ. 3-00 |



ACC. No. 18583.

மன்னர் வேள்வியில் தடாதகைப்பிராட்டி அவதாரம்
சித்திர விளக்கம் 5 பக்கம் 195

ACC. NO. 18583.



210

## உள்பொருள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தீப்புகுந்ததேவியின் தத்துவம்(திருப்புகழ்மணி)... | 193 |
| 2. | தடாதகைப் பிராட்டி திருவவதாரம் (கி. வா. ஜகந்நாதன்) ... | 195 |
| 3. | குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) ... | 200 |
| 4. | "குமர குருபர குணதர" திருவருணை திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... | 205 |
| 5. | கொற்றவனும் குழந்தையும் (அ. கி. ரங்கராஜன்) | 215 |
| 6. | சந்நியாசி (ஆனந்தன்) ... | 219 |
| 7. | ஆதாரம் இலேன் (கி. வா. ஜ.) ... | 222 |
| 8. | உபநிஷதங்களின் உள்ளொளி (ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி) ... | 226 |
| 9. | தெய்வ ரகசியம் (ரஸபதி) ... | 231 |
| 10. | DISEASE OF LITIGATION AND CURE (*Thiruppugal Mani*) ... | 239 |


---

### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

**அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.**

---

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

அமிர்தவசனி

தெய்விக மாதப்பத்திரிகை.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.

ஆசிரியர் சு. முத்துஸ்வாமி

| மலர் 14 | சுபகிருது ஆவணி<br>ஆகஸ்ட்—செப்டம்பர் 1962 | இதழ் 5 |
|---|---|---|

# தீப்புகுந்த தேவியின் தத்துவம்

(திருப்புகழ் மணி)

இராமாயணத்தின் இறுதியில் இராமன் சீதையை அரக்கனுடைய சிறையிலிருந்து மீட்டு உலகத்தை ரக்ஷித்தார். பூமிதேவியின் அன்புப் பெண் சீதை. சீதைவேறல்ல, பூமிதேவி வேறல்ல. அவள் அன்பில் பிறந்ததும், அன்பில் வளர்ந்ததும் அன்பில் கலந்ததும் தன் தாயாகிய பூமிதேவியிடந்தான்.

சீதையை மீட்டது உலகத்தையே மீட்டதாகும். சீதையின் துயர் ஒழிந்தது; உலகின் துயர் அழிந்தது. அக்னி எனும் தூய்மைத் தாய், தானடைந்த பொருள்களையெல்லாம் தூய்மையாக்கி அவைகளை விபூதிமயமாகச் செய்து வைக்கிறாள். அக்னியில் ப்ரவேசமாவது பொருளின் அசுத்தத்தை யெல்லாம் நீக்கி, அப்பொருளைத் தூய்மையாக்கி விபூதிமயமாய்ச் செய்வது. தீயால் எரிக்க முடியாத விபூதி நீரில் கரைந்து விடுகிறது. விபூதி என்பது ஐசுவரியம். சீதையே ஐசுவரிய தேவதையாகிய லக்ஷ்மி.

சீதாதேவியானவள் தூய்மையிலும் தூய்மையான பூமிதேவியின் செல்வப் பெண்ணானதால், இராவணன் சிறையிலிருந்த பொழுதும் அவன் தன்னை அணுகாத

வண்ணம் தான் தீவண்ணமாயிருந்து விட்டாள். அசுத்தம் மாய்ந்து விபூதிமயமானாள் சீதை.

இந்தத்தாய்மை யரசியை உலகெலாம் அறியும்படி ஸ்ரீ ராமன் விரும்பினான் போலும். அதனால் தீயில் புகுந்தாள் சீதை. தீயின் தூய்மையைவிட விபூதியின் தூய்மை மேற்பட்டதாகையால், விபூதிமயமான சீதையைத் தீயினால் எரிக்க முடியவில்லை. எரிக்க முடியாதது மாத்திரமல்ல; விபூதியிலே அக்னியும் அடங்கி விடுகிறது. விபூதிமயமான தூய்மையின் பராகாஷ்டையின் சொரூபமான சீதாதேவி அக்னிப் ப்ரவேசம் செய்தாள். தீயின் தூய்மை சீதாதேவியின் தூய்மைக்கு மிகவும் கீழ்ப்பட்டிருந்ததால், அக்னி பகவான் எரிக்கப்பட்டான். சீதை ஒளிரப் பெற்றாள். ஆதலால, செந்தழல் வேள்வியால் அடையும் தூய்மையைச் சீதையின் தியானத்தால் பெறலாம். அதை நிரூபணம்செய்தான் இராமன். இராம தியானத்தால் உண்டான சீதையின் கற்புத் தீ அக்னியையே எரித்ததாம். சீதையின் தூய்மையை உலகறிந்தது. பொறுமையாம் பார்தேவி பெற்ற தூய்மையின் வடிவே சீதை. சீதா எனும் பாதேவியையும், பதியான ரகுபதியையும் நினைத்து மறவா மனமுடையார் உலகினில் பிறவிக் கடலில் புகார். இராமனின் பிரிவாற்றாமை எனும் அக்கத்தீயில் உலகின் காமத்தீ அணைந்ததாம். இராவணனாகிய வினை மாண்டதால் இராமனை நினைத்த தவத்தீ அக்னி தேவனையும் எரித்ததாம். சீதாராம் எனும் ராமசப்த கோஷம் நிற்கத் தீயின் பயமில்லை உலகிற்கு. ஆடம் (Atome) தீயாயினும், மற்ற எந்தத் தீயாயினும் அஞ்சவேண்டாம். இராமனைப் பிரிந்த தாலுண்டான பிரிவாற்றாமை எனும் தீயில் வெந்த சீதை கருணைக் கடலாகிய இராமனில் கலந்தாள். ஆதலால் சீதாராம் எனும் சப்தத்தில் மூழ்கியவர், துயரத் தீயில் புகார். துயரம் தாண்டிய நாதகீத ஆனந்தவைகுண்டத்தில் நீடூழிவாழ்வர். ஜெயசீதாராம்.

# தடாதகைப் பிராட்டி திரு அவதாரம்

(கி. வா. ஜகந்நாதன்)

மதுரைமா நகரைத் தலை நகராகக் கொண்டு மலையத் துவசன் என்ற பாண்டியன் ஆட்சி புரிந்து வந்தான். சோழ மன்னனாகிய சூரசேனனுடைய மகள் காஞ்சனமாலை என்பவளைத் திருமணம் செய்துகொண்டான்.

பல நாட்களாக அவர்களுக்கு மகப்பேறு இல்லாமல் இருந்தமையால் வருந்திய பாண்டியன் அசுவமேதயாகம் புரிந்தான். பிறகு ஒவ்வொரு யாகமாகச் செய்து வரலானான். தொண்ணூற்றொன்பது யாகங்களைச் செய்து முடித்தான்.

நூறு யாகங்களைச் செய்தவர்கள் இந்திர பதவியை அடைவார்கள். அதனால் இநதிரனுக்குச் சதமகன் என்று ஒரு பெயர் உண்டு. தொண்ணூற்றொன்பது அசுவமேத யாகம் செய்து முடித்த பாண்டியன இன்னும் ஒன்றைசசெய்து முடித்தால் தன் பதவி பறிபோய் விடுமே என்று அஞ்சினான் இநதிரன். அதனால் அவன் பாண்டிய மன்னனிடம் வந்து, "உனக்கு மகப்பேறு வேண்டுமானால் புத்திர காமேஷ்டி செயவாயாக !" என்று சொல்லிப போனான.

அவ்வாறே மிகச சிறப்பாக மலையத்துவசன் அந்த யாகத்தைச் செய்யலானான். அந்த யாக குண்டத்திலிருந்து ஒரு தாமரை மலர். மூன்று வயசுடைய குழந்தையாக அம்மை எழுந்து வந்தாள்.

எலலா உலகமும் மகிழவும், சைவம் முதலிய சமயங்கள் தழைக்கவும், அதர்மம் அழிநது தாமம் ஓஙகவும், வேதம் எஙகும் இசைக்கவும், தமிழ் நாட்டுக்குப் பெருமை உண்டாகவும், பாண்டியர் ஏற்றம் பெறவும், அக்கினி தான் செய்த தவத்தின் பயனை அடையவும் எம்பெருமாட்டி அந்த வேள்விக் கனலில தோன்றினாள்.

---

தன்போல் பிறரை யெண்ணும் தகுதியரை,
அன்னையென, மக்கள் அறிந்தேத்தல் கண்டாமே.

தலையில் சுடிகையும் கொண்டையும் அதில் கட்டிய முத்து மாலையும் விளங்க எழுந்தாள். வாயின் அமுதம் மார்பின் வழியே வழிய முத்துமாலை மார்பிலே ஒளிவிடச் செம்பவள மாலையும் திகழ வந்தாள். ,இடையிலே சிறிய துகிலும் அதன் புறத்தே சிறிய மணிமேகலையும் சுடர்விட, காதில் குதம்பை ஒளிவீச எழுந்தருளினாள். அமுதம் போன்ற மழலைச்சொல் பேசிக்கொண்டு புன்னகை அரும்ப மூன்று தனங்களையுடைய பெண்ணாக, எவ்வுயிரையும் ஈன்ற பிராட்டி திருவவதாரம் செய்தாள்.

சிறிய தளிர்போன்ற மெல்லிய அடியில் சிறிய மணிகளை உள்ளே உடைய சிலம்புகளும் சதங்கைகளும் ஒலிக்கும்படி, தளிர் நடை கற்றாற்போல மெல்ல நடந்து வந்து இளநகை தோன்ற, தரும நெறியில் வாழ்க்கையை நடத்துபவர்களுககு இம்மைப் பயனையும் சுவர்க்க போகத்தையும் மோட்சத்தையும் அருளும் அம்பிகை, காஞ்சனமாலையின் மடியில் வந்து மூனறு வயசுப் பெண்பிள்ளையாக அமர்ந்தார்.

"குறுந்தளிர்மேல் அடிக்கிடந்த சிறுமணிநூ
 புரஞ்சதங்கை குமுறி ஏங்க
நறுந்தளிர்போல் அசைந்துதளர் நடையொதுங்கி
 மழலையிள நகையும் தோன்றப்
பிறந்தபெரும் பயன்பெறுபொன் மாலைமடி
 யிருந்தொருபெண் பிள்ளை ஆனாள்
அறந்தழுவும் நெறிநின்றோர்க் கிகபோக
 வீடளிக்கும் அம்மை அம்மா!"

கருவிருந்து துன்புற்றுப் பெறாது பெற்ற அந்தக் குழந்தையைக் காஞ்சனமாலை எடுத்து ஆசையுடன் அணைத்து உச்சி மோந்து முத்தம் கொடுத்து எல்லையற்ற மகிழ்ச்சியை

---

கல்லாம் எலும்பைக் கடிக்கின்ற நாயாவர்,
இல்லாளை நீங்கி, அயல் மாதர்களை எண்ணுனரே.

அடைந்தாள். அவள் செய்த முன்னைத் தவத்தினால் எம் பெருமாட்டி அவளுக்குக் குழந்தையாக வந்தாள். அந்தப் பழைய வரலாறு இதுதான்.

* * * * *

விசுவாவசு என்ற பெயருடைய வித்தியாதரனுக்கு வித்தியாவதி என்ற அழகிய பெண் இருந்தாள். அவளுக்கு அம்பிகையிடத்தில் பேரன்பு உண்டாயிற்று. அப்பெருமாட்டியை வழிபட வேண்டும் என்ற தன் விருப்பத்தை அவள் தன் தந்தையிடம் சொல்ல, அவன் அவளுக்குத் தேவியின் மந்திரத்தை உபதேசித்தான். அவள் அதனை ஜபம் செய்து வந்தாள். ஒருநாள் அவள் தன் தந்தையை நோக்கி, "அம்பிகையை வணங்குவதற்குச் சிறந்த தலம் எது?" என்று கேட்டாள். அவன், "துவாதசாந்த மென்றும் சிவராசதானி யென்றும் பெயர் பெற்றது மதுரை. சக்திபீடங்கள் அறுபத்து நான்கில் சிறந்ததாகிய முதற்பீடம் அது. அங்கே பலர் அம்பிகையை வணங்கித் தம் விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்" என்றான்.

வித்தியாவதி மதுரைமாநகரம் சென்று அம்பிகையை எண்ணித் தவம்புரியத் தொடங்கினாள். பலவகை விரதங்களை மேற்கொண்டு கடுந்தவம் புரிந்தாள். இவ்வாறு ஓராண்டு தவஞ் செய்து நிறைவேற்றி அம்பிகையின் சந்நிதியை அடைந்து வணங்கினாள். யாழை எடுத்து அன்பினால் உருகிப் பாடினாள்.

"ஒளியினால் உலகத்தையீன்று, மீன் தன் பார்வையால் குஞ்சுகளைப் பார்த்து வளர்க்கும் தன்மையைப் போல வளர்க்கும் அங்கயற்கண் அம்மையே! இத்தகைய பெருமாட்டியாகிய நீ இமவானுக்கு மகளாகத் தோன்றி அன்னம், மயில், மைனா, கிளி ஆகியவற்றை வளர்த்து விளையாடினாயே! என்ன ஆச்சரியம்!"

---

அமைதியைத் தாரா அறிவினால் யாது பயன்?
நமையளிக்கும் வாய்மையினை, நாம்நம்பி வாழ்வோமே.

என்ற பொருளுள்ள பாட்டைப் பாடி யாழ் வாசித்தாள் :

" ஒளியால் உலகின் றுயிர்அனைத்தும்
மீன்போல் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கும் அங்கயற்கண்
அன்னே, கன்னி யன்னமே,
அளியால் இமவான் திருமகளாய்
ஆவி அன்னம் மயில் பூவை
தெளியா மழலைக் கிளி வளர்த்து
விளையாட் டயரும் செயல் என்னே !"

இப்படியே, உலகம் ஈன்ற அன்னை இமவானுக்கு மகளாகி விளையாடிய பெருங் கருணையைப் பாராட்டிப் பாடினுள். அதைக் கேட்டு அவளுடைய பேரன்பை உணர்ந்த மீனுட்சியம்மை அவளுக்கு அருள் செய்யும் பொருட்டு மூன்று வயதுடைய இளங் குழந்தை உருவத்தில் அவள் முன் தோன்றினுள். அம்பிகையைக் கண்டவுடனே வித்தியாவதி இறைஞ்சினுள். அம்மை, " உனக்கு என்ன வரம் வேண்டும் ?" என்று கேட்டாள். இறைவி அருள் கூர்ந்து, " மலயத்துவச பாண்டியன் இந்நகரை ஆளும்போது, நீ காஞ்சன மாலையாகப் பிறந்து அவனை மணம் செய்து கொள்வாய். அப்போது உனக்குக் குழந்தையாக வருவேன் " என்று அருளி மறைந்தாள். அன்று கொடுத்த வரத்தின்படி இன்று அம்பிகை மூன்று ஆண்டு நிரம்பிய குழந்தையாகத் திருவவதாரம் செய்தாள்.

* * * *

தான் ஆண் பிள்ளையை வேண்டிச் செய்த யாகத்தில் ஒரு பெண் பிள்ளை வந்ததைக் கண்ட பாண்டியன் மனம் வாடினுன். ' பிள்ளையில்லாமல் பலகாலம் வருந்தி அருந்தவம் பல புரிந்தேன. பிறகு இந்தப் புத்ர காமேஷ்டியைச் செய்

வீடும் படிபுரியும் வீணர் உறவகனறு,
ஓடுநீ ! நல்லோர் உறவுகொள் என்மனமே !

தேன். இது ஒரு பெண் குழந்தையைத் தந்தது. அப்படி வந்த பெண்ணும், பகைவர்கள் கண்டு நகைக்கும்படி மூன்று தனங்களுடன் இருக்கிறதே! யான் என் செய்வேன்!' என்று வருந்தினன். அப்போது வானத்தில் ஓர் அசரீரி வாக்கு எழுந்தது; "பாண்டிய மன்னனே, நீ வருந்தாதே. இந்த மகளுக்கு ஆண் குழந்தையைப் போலவே செய்ய வேண்டிய சடங்குகளை செய்க. தடாதகை என்று பெயரிட்டு தக்க பருவம் வந்தவுடன் முடிசூட்டுவாயாக! இவளுக்கு ஏற்ற கணவன் வரும்போது இவள மார்பில் உள்ள ஒரு தனம் மறைந்துவிடும்" என்ற அது கூறியது.

அதைக் கேட்ட பாண்டியன், இறைவன் திருவருளால் அமைந்தது இது என்று எண்ணி மனமகிழ்ந்து குழந்தையை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான. எங்கும் முரசுகள் அதிர்ந்தன; இசைக் கருவிகள் இயம்பின; மக்கள் ஆரவாரம் செய்தார்கள். மன்னன் பெரியவர்களுக்குப் பல வகைப் பொருள்களைத் தானம் செய்து ஏழைகளுக்கு நித்யம் வாரி வீசினன.

"சிறையிலுள்ள கள்வர்களை விடுதலை செய்யுங்கள். சிறைச்சாலையையே இடித்துவிடுங்கள். ஏழு ஆண்டுகள் வரிகளை வாங்க வேண்டாம். அயல் நாட்டு வேந்தர்களும் கப்பம் கட்ட வேண்டியதில்லை. சுங்கவரியை வாங்கவேண்டாம். பல தர்ம நிலையங்களுககு நிலம் விடுங்கள். கோயில்களைப் புதுக்குங்கள்; புதியனவாகக் கட்டுங்கள்" என்று அரசன் எங்கும் முரசறையச் செய்தான்.

வேண்டியவர்கள் வேண்டிய பண்டங்களை யெல்லாம் முகந்து கொள்ளும்படி வழங்கினன. சிறைப்பட்ட பகையரசர்களை விடுவித்துத் தக்க பரிசில்களை நல்கி அவரவர்கள் நாட்டுக்குச் செலலும்படி விடுத்தான். நகர் முழுதும் அலங்காரமும் ஆரவாரமும் ஆனந்தக் கூத்தாட்டும் மலகின.

இத்தனை சிறபபுடன தனக்குக் குழந்தை கிடைத்த மகிழ்ச்சியைக கொண்டாடிய மலையத்துவச பாண்டியன் அந்தக் குழந்தையைக் கண்ணின் மணிபோல வைத்து வளர்த்து வரலானன்.

---

**சிந்தையால், வாக்கால், செய்கையால், நல்வழியை எந்நாளும்எண்ணி, இன்புறுவர் நல்லோரே.**

# குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

## 15. இகபர பதயே நமோநமஃ

இகம்—இவ்வுலகத்திற்கும், பரம்—(மறு பிறப்பில் அடையும்) சுவர்க்க முதலிய உலகத்திற்கும், பதயே—தலைவனை குமரனுக்கு, நமோநம—போற்றி ! போற்றி !!

**இகபரம் :**

மக்கள் பெறத்தக்க வாழ்வு இகத்திலும் பரத்திலும் என இருவகைப்படும். இகத்தில் அடைவது அறம், பொருள், இன்பம் என்பவற்றால் வரும். பரத்திலடைவது பிறந்திறவாப் பெருமையையுடைய வீட்டுப் பேற்றினால் வரும். மேலும் இம்மை நலன் என்னும் இவ்வுலக இன்பவாழ்வுக்கு இன்றியமையாதது பொருள். மறுமை நலனாகும் அவ்வுலக வாழ்விற்கு அவசியமானது அருள்.

" அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை பொருளில்லார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு "

என்று வள்ளுவரின் தெள்ளுதமிழ் செப்புகின்றது.

**பொருளின் சிறப்பு :**

இம்மையி லடையத் தக்கன எல்லாவற்றிற்கும் பொருளே ஏதுவாகும். இதனால்தான் அறம், பொருள், இன்பம் என்று வரிசைப்படுத்தும் போது பொருள் நடுவிலே வைதது்க் கூறினர் பெரியோர். பொருள்தான் அறத்தை வளர்ப்பதும் இன்பத்தை எய்துவிப்பதும் ஆகும்.

" வடுவிலா வையத்துள் மன்னிய மூன்றில்
நடுவணது ஏய்த இருதலையும் எய்தும் "

---

குறைவிலலா மஞ்சளோடு, குங்குமத்தால், நாளும்
நிறைவுபெறு மாதர், நிழல் பணிந்து நிற்போமே.

[இவ்வுலகில் பொருந்திய அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில், நடுவிலுள்ள பொருள் கிடைத்தால் மற்ற இரு புறங்களிலுமுள்ள அறமும், இன்பமும் கிடைக்கும்] என்ற நாலடியார் வாக்கும் நோக்கத் தக்கது. எனவே இம்மையில் வாழ்வு வளம்பெறப் பொருளே வேண்டப்படுவது.

"முனிவரும் மன்னரும் முனனுவ பொன்ஞல் முடியும்; என்ற மணிவாசகமும் காண்க. முருகபிராஞரை வழிபடு வார்க்கு அவன் பொன்ஞய், மணியாய், பொருளாயிருந்து பொன்னும் மெய்ப்பொருளும் போகமும் தருவான். அதஞல் தான் அவனே நம் அருணகிரிநாதரும், "பொன்னே மணியே பொருளே அருளே மன்னே மயிலேறிய வானவனே" என்கி ருர். இதஞல் இகத்திற்குரிய பொருள் முதலிய குன்ரு வளங் களும் பிற குறைவிலாச் செல்வமுமீவான் குமரன் என்க.

அருளின் அருமை:

"அருட்செல்வம் செல்வத்துட்செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள"

பலவகைப்பட்ட செல்வங்களால் ஆராய்ந் தெடுக்கப்பட்ட செல்வம் அருளான் வருவதே. அதைத் தவிர்த்த பிற பொரு ளால் வரும் செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன. எனவே பெரியோர்கள் "அருள் தருவாயே" என்றே வேண்டு வர்.

"யாம் இரப்பவை—
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே"

[உருளுகின்ற கொத்துக்களாகவுள்ள கடப்ப மாலையணிந்த பிரானே! உன்னிடம் நாங்கள் வேண்டுபவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல. அருள், அன்பு, அறன் என்ற

மண்ணை நிலமகளா, மாப்பொன் திருமகளா,
பெண்ணை மலைமகளாப் பேரறிஞர் எண்ணுவரே.

மூன்றுமே] எனவரும் பரிபாடல் அடிகள் சிந்திக்கத் தக்கன. இவ்வாறு அருள் வேட்கையுற்ற அறவோர் வேண்டுவர். குகபிரான் அருளும் பொருளும் அனைத்தும் அவரவர் குறிப்பறிந்து உதவுவான்.

"மாந்தர்க்கு அமரர்கள் வேந்தற்கு அவரவர் வாஞ்சைப் படி யருள்—பெருமாளே"

வேறுவகை :

இம்மையில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பர். உடற்பிணி களையவும் உமைபாலன் உதவுவன்.

"இருமலு ரோகம் முயலகன் வாதம்
எரிகுண நாசி—விடமேநீர்
இழிவு விடாத தலைவலி சோகை
எழுகள மாலை—இவையோடே
பெருவயி றீளை எரிகுலை சூலை
பெருவலி வேறும்—உளநோய்கள்
பிறவிகள் தோறும் எனைநலியாத
படியுன தாள்கள்—அருள்வாயே"

என வேண்ட உடல்பிணிகள் ஒழிப்பான்.

வறுமையற்ற வாழ்வும், வளனெலாம் நிறைந்து அழகு, இளமை, பொன்மேனி முதலியவற்றையும் பெறுமாறு இளம் பூரணன் இனிது அருளுவான்.

"சிறிது மிடியு மணுகாதே
அமரர் வடிவும் அதிக குலமும்
அறிவு நிறைவும்—வரவேநின்
அருளதருளி எனையும் மனதொடு
அடிமை கொளவும்—வருவாயே

மேலும் நல்ல வண்டி வாகனங்கள், எல்லோரும் மதிக்க விளங்

---

ஈரமனம், மெய்ம்மை யிணையுமனம், என்றுமே
வீரமனம் கொண்டார், வியத்தகுமெய்ஞ் ஞானிகளே!

ரும் கவித்துவம், பிரபுத்துவம், குருத்துவமும் முருகனருளால் வருவன.

தண்டிகை கனப்பவுசு எண்திசை மதிக்கவளர்
சம்ப்ரம விதத்துடனே—அருள்வாயே

* * *

மண்ணுளும் மன்னரும் வணங்கத்தக்க சிறப்பும் வரும்.

'' மண்டலிகர் ராப்பகலும் வந்துசுப ரட்சைபுரி
வந்தணைய புத்தியினை—அருள்வாயே (திருப்)

நாம் பெறத்தக்க இம்மை நலனை இலைவேலிறைவன் இனிதரு ளும் சிறப்பை இரத்தினச் சுருக்கமாக,

'' நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிழலுண்டு பலனுமுண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையுமுண்டு
ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு
உடையுண்டு கொடையுமுண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தமுறு
முளமுண்டு வளமுமுண்டு
தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவுமுண்டு
தேனுண்ட வண்டுறு கடம்பணியு நின்பதத்
தியானமுண் டாகில் அரசே!
தாருண்ட சென்னையில் கந்தகோட்டத்தில் வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே

என்று இராமலிங்க அடிகள் அருளியது காண்க.

---

தூதுவந்த கண்ணன், துரியன் பிழை பொறுத்தான்;
ஈது, உயிர்கட்(கு) ஏற்றஉப தேசமரோ.

**தொகுப்புரை :**

இகத்திற்குரிய உடல் உரன், வறுமை நீங்கிய வளம், பொருள், புகழ், போகம் என்ற எல்லாமருளுவதோடு மறுமைக்குரிய முத்தியுமீவன்.

" சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமை சிவ ஞானமுத்தி பரகதியும் நீ கொடுத்து
உதவி புரிய வேணும் நெய்த்த—வடிவேலா "
" இகபர சௌபாக்கியம்—அருள்வாயே "

என்று ஓசைமுநிவர் உரைப்பதும் உன்னுக. இகத்திலின்ப வளங்களும் பரத்தில் பரகதியும் பன்னிருகரத்தோன் அருள வல்லான் என்பது விளங்க

" இகபரபதயே நமோநம "

என்று பாம்பனடிகளும் பரவுகின்றார்.

" நின்மலச் செஞ் சோதி வடிவுடையவுனை அனவரதம்
நினைப்போர்க்கு என்றும்
பொன்மயச் செம்மேனி உடம்புண்டாகும் நரைதிரைகள்
பொருந்தா புன்கண்
தன்னுரத்தி னுலுயிர் கொள்கூற்று மணுகாது எதினும்
சத்தாய் நிற்கும்
சின்மயத்தின் தெருட்பிழம்பே யான்தொழுமோர்
வேல்சமர்த்தா ! சிவச்சீர்க் குன்றே "

(பாம்பனடிகளார்—திருத்தொடையல்)

" இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கு நிறைகின்ற பொருளே "

(திருவலங்கல் திரட்டு)

---

**பெருமைபெறு வண்மை, பேசலுறும் ஆண்மை,
ஒருமை உணர்வினர்க்கே, உற்ற அனுபவமே.**

# திருப்புகழ் விரிவுரை.

## (குகஶ்ரீ)

குமர குருபர குணதர நிசிசர
திமிர தினகர சரவண பவகிரி
குமரி சுதபதி ரதிசுத சுரபதி    குலமானுங்-
குறவர் சிறுமியு மருவிய திரள்புய
முருக சரணென வுருகுதல் சிறிதுமில்
கொடிய வினையனை யவலனை யசடனை    யதிமோகக்;
கமரில் விழவிடு மழகுடை யரிவையர்
களவி னொடுபொரு ளளவள வருளிய
கலவி யளறிடை துவளுறும் வெளிறனை    யினிதாளக்-
கருணை யடியரொ டருணையி லொருவிசை
சுருதி புடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு    மறவேனே;
தமர மிகுதிரை யெறிவளை கடல்குடல்
மறுகி யலைபட விடநதி யுமிழ்வன
சமுக முககண பணபணி பதிநெடு    வடமாகச்-
சகல வுலகமு நிலைபெற நிறுவிய
கனக கிரிதிரி தரவெகு கரமலர்
தளர வினியதொ ரமுதினை யொருதனி    கடையாநின்;
றமரர் பசிகெட வுதவிய க்ருபைமுகில்
அகில புவனமு மளவிடு குறியவன்
அளவு நெடியவ னளவிட அரியவன்    மருகோனே!
அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவை யறிவது பொருளென அருளிய    பெருமாளே!

---

பொன்னைச்சேமிப்பதுபோல், பொறுமைதனைப் போற்றுகின்ற
அன்னையென நின்றார், அருள் முதலர் ஆவாரே.

(பதவுரை.) (தமரம்......... மருகோனே !)

தமரம் மிகு திரை எறி வளை கடல் குடல் மறுகி அலைபட— பேரொலி பெருக்கும் அலைகளை (க் கரையில்) மோதுவதும், (உலகைச் சுற்றி) முற்றுகை யிட்டதுமான கடலின் நடு இடம் குழம்பிக் கலங்கவும் ;

விட நதி உமிழ்வன சமுக முக பண பணிபதி நெடு வடம் ஆக— (உருத்த) ஆலகாலத்தை ஆறுபோல் உமிழ்வன ஆன மாபெரும் தோற்றமுற்றதும், (வளர்ந்த) பல படங்களை யுடையதுமான வாசுகி, நீண்ட (கடை) கயிறு ஆகவும் ;

சகல உலகமும் நிலைபெற நிறுவிய கனக கிரி திரிதர— எல்லா உலகங்களும் நிலை பெற நிறுத்திய பொன்மய மந்தர மலை, (மத்தாகிச்) சுழலவும்;

வெகு கரமலர் தளர - (கடையும்) பல கைகளாகிய தாமரைகள், சோர்வடையவும்;

இனியதொர் அமுதினை ஒரு தனி கடையாநின்று - இனிப்பதான ஒப்பற்ற அமுதத்தைத் தனித்த முறையில் கடைந்து (எடுத்து);

அமரர் பசி கெட உதவிய க்ருபை முகில் - தேவர்களுடைய (தீராப்) பசி தீர ஊட்டிய, (கைம்மாறு கருதாத) மேகம் போன்ற குணமும் நிறமும் கொண்டவரும் ;

அகில புவனமும் அளவிடு குறியவன் - உலகங்கள் அனைத்தையும் அளக்க வல்ல குள்ளரும் ;

அளவு நெடியவன - (உலகை) அளக்க நீண்டு உயர்ந்தவரும் ;

அளவிட அரியவன் மருகோனே - அளந்து காண முடியாத பெருமை அமைந்தவருமான (மாபெரும்) திருமாலின் மருமகனே !;

(அரவு......... பெருமாளே !)

---

நிலமும் பிறர்பொருளும், நீளவஞ்சித் தார்தம்
குலமுழுதும் நாசமிது கூறமனம் நோகிறதே.

அரவு புனைதரு புனிதரும் வழிபட - பாம்புகளை அணிகலனாத் தரித்த (பரம) தூயவரான சிவபிரானும், (மாணவராக நின்று) வழிபாடு செய்ய ;

மழலை மொழிகொடு தெளிதர - மழலைச் சொற்களைக் கொண்டே (வித்தகத்) தெளிவு விளைய ;

ஒளி திகழ் அறிவை அறிவது பொருள் என அருளிய பெருமாளே - ஒளி மயமாக விளங்கும் அறிவை அறிவதுதான் அனுபூதி என்று, (அவர்க்கு) உபதேசித்த பெருமிதஞ் சிறந்த பெரியானே !;

குமர - இறவாப் பிறவா எம்மானே ! (உமக்கே அடைக்கலம்) ;

குருபர - அறியாமை இருள் அகற்றும் ஆரியனே ! (உமக்கே அடைக்கலம்) ;

குணதர - (அருள்) குணங்களை (அணிகலனாக) அணிந்தவனே ! (உமக்கே அடைக்கலம்) ;

நிசிசர திமிர தினகர - இரவில் நடமாடும் அவுண இருளையழிக்கும் ஆதித்தனே ! (உமக்கே அடைக்கலம்) ;

சரவணபவ - மங்கள ஒளிமய அமைதி உக்ரம் ஆக அவதரித்தவனே ! (உமக்கே அடைக்கலம்) ;

கிரி குமரி சுத - மலை மகளான உமை மைந்தா ! (உமக்கே அடைக்கலம்) ;

பகிரதி சுத - கங்கை தநயா ! (உமக்கே அடைக்கலம்) ;

சுரபதி குல மானும் - அமரர்கள் தலைவனான இந்திர குமாரியெனும் தேவ யானையாரும் ;

குறவர் சிறுமியும் மருவிய திரள்புய - குறவர் இளங் கொடியான வள்ளியம்மையும் (பரிவொடு) தழுவும் பன்னிரண்டு தோளினனே ! (உமக்கே அடைக்கலம்) ;

---

கண்ணில் கருணை ; கரத்தில் வளர்ச்சிநலம் ;
எண்ணில் திருமகள் ; பெண்மை இயல்பிதுவே.

முருக சரண் என உருகுதல் சிறிதும் இல் கொடிய வினையனை - பொலிவு மண ஓம்பொருள் ஆனேனே ! (அடியேன்) உமக்கே அடைக்கலம் என்று (இடையறாது) ஓதி, (உள்ளம்) உருகுதல் ஒரு சிறிதும் இல்லாத குரூரமான செயல் கொண்டவனும் ;

அவலனை - பொழுதை வீணே போக்குபவனும் ;

அசடனை - (சிறந்ததை) அசட்டை செய்பவனும் ;

அதிமோக கமரில் விழவிடும் அழகுடை அரிவையர் - அளவிறந்த காம (வினைவிற்குக் காரணமான) வெடிப்பில் விழும்படிச் செய்யும் (போலி) வனப்புடைய (சில பொல்லாத) பூவையர் ;

களவினொடு பொருள் அளவு அளவு அளறு இடை துவளும் வெளிறனை - திருட்டுப் புத்தியுடன், (தந்த) பொருள் எவ்வளவோ அவ்வளவிற்கு (த் தக்கபடி தம்மைத் தருகிற சேர்க்கை அனுபவச்) சேற்றின் நடுவில் துவண்டு விழும் அறிவில்லா எளியேனை ;

இனிது ஆள - இனிதாக ஆட்கொள்ளற் பொருட்டு ;

அருணையில் ஒருவிசை கருணை அடியரொடு-திருவண்ணாமலையில் ஒரு சமயம், அருட்கு உரியர்களான அடியார்களுடன்;

சுருதி புடைதர வரும் - (தூய) நான்மறைகள் சூழ்ந்து (துதித்து) வர, எழுந்தருளிச் சேவை தந்த ;

இரு பரிபுர கமல மலரடி கனவிலும் நனவிலும் மறவேனே - சிலம்புகள் அணிந்தனவும், தாமரை மலர்போல் மென்மையும் செம்மையும் மேவியனவுமான (உமது) இருதிருவடிகளை, கனவு நிலையிலும், விழிப்பு நிலையிலும் (அடியேன்) மறக்கவே மாட்டேன், (எ - று).

---

அமைதியைக் காணுமல், அல்லலுறும் உள்ளம்,
இமைக்குமுன், எத்தனையோ எண்ணம்கொள் கின்றதுவே.

விரிவுரை.

வாயில் பிறப்பது வாய்மையின் முழுமை. உளத்தில் உதிப்பது உண்மையின் சொரூபம். மெய்யின் உழைப்பில் மெய்ப்பொருள் விளங்கும். வாய்மை உண்மை மெய்ம்மை மூன்றும், வானவர் பதவியை வழங்குவது இயல்பு. இப்படிச் சில ஆன்மாக்கள், இமையவர் ஆயினர். "பெருமையும் சிறுமையும் தாம்தர வருமே."

இந்த அருமை யறியாத ஒருசிலர், பொன்னுலகரைக் கண்டு பொருமை கொண்டனர். பொங்கி எழுந்தனர். இரக்கம் அற்ற அரக்கர்கள் ஆயினர். இமையவர் வாழ்வில் இடிபுடை எழுப்பினர்.

அதைத் திருமால் அறிந்தார். வானவர் ஆயுள் வளர வேண்டும். அவர்களது நுண்மை உடற்கு வன்மை வேண்டும். அப்போது தான் அசுர பலம் அஞ்சி யடங்கும். இதற்கு யாது வழி ? முகுநதர் எண்ணினர். ஒரு முடிவிற்கு வந்தார்.

மூலிகைகளைப் பறித்தார். பாற்கடலில் இட்டார். மந்தர மலையே மத்து. அம்மலை கடலில் ஆழாதபடி, ஆமை யாயினர். முதுகில் தாங்கினர். கம்பீர வாசுகியே கடைகயிறு. ஓராயிரம் கைகளால் ஓயாது கடைந்தார், கைதளர்ந்தது. மெய சோர்ந தது. எனினும் பின் வாங்கிலர். இதனால அவர் பட்டபாடு ஒரு பாரதம். இறுதியில் அமுதம் திரண்டது. வானவர்க்கு வழங்கினர். கடமையைச் செய்தேன் எனற களிப்பில், அதன வழிப்பிறந்த மாபெரும் ஆயர்சியை மறந்தார். பிறர் வாழப பாடுபட்டுப பிரதிப் பயன் கருதா அப்பெருமானை, க்ருபை முகில் என்று, தனியிருந்து கருதுவது தருமம்.

மற்றும் ஒரு செய்தி, நம் மனனத்திற்கு உரியது. இதோ பாருங்கள் !

---

செல்வத்தில, மாளிகையில், சேரும் அணிகலனில,.
அல்லலே உண்டென்(று) அறிவார்கள் யாருளரே ?

கள்ளத்தனம் செய்து, நல்லவர்கள் போல் நடிக்கும் கயவர்கள் பலர். அவர்கள் என்றும் இருப்பர் ; எங்கும் எழுவர். தாம் செய்யும் குற்றம் பிறர்க்குத் தெரியாதிருக்க, அவர்கள் தருமவான்களைத் தலைவர் ஆக்குவர் ; அத்தலைவர்கள் நிழலில் தலை மறைந்து இருந்து, தகாத காரியம் பல செய்வர்.

ஒரு சமயம், திருமாலடியார் ஆன வள்ளல் பலி, தருமம் தவறாது தரணியை யாண்டார். இரக்கம் அற்று இரவில் உலவும் அதிபயங்கர அசுர சாதகர், அவர் குடைநிழலில குடிகளாயினர். பலியின் வாழ்வில் பழிபடர, அளவிலாத் தீமைகளை யாற்றினர். வானோர் கலங்கினர். மண்ணவர் வருந்தினர். அவர்கள் செய் அக்கிரமங்களை, என்றும் அரசர் அறிந்திலர்.

கள்ளர்கள் கண்ணெதிரில், திருமால் குள்ளர் ஆயினர். அன்பர் மாபலிமுன் அணுகினர். தவம் செய்ய மூன்றடி நிலம் தா என்றார். அங்ஙனமே தாரை வார்த்துப் பலி தந்தார். சிறிய வித்தில் பெரிய ஆல்போல், அவர் கண்முன், நெடியோன் எனத் திருமால் உருவம் நீண்டது. மேல் ஏழ் உலகை ஓரடியால் அளந்தது ; கீழ் ஏழுலகை மற்றோர் அடியால அளந்தது. மூன்றும் அடிக்கு எங்கே இடம் என்று முணுமுணுத்தது அத் திருவுருவம். 'அகில புவனமும் அளவிடு குறியவன அளவு நெடியவன்' ஆயினன் என்று அறிந்து, தலையும் உண்டு தருதற்கு என்று தாழ்த்திக் காட்டினர் மாபலி.

உடனே திருவடித் தீக்கை செய்து, அவரைப் பாதலத்தில் ஆழ்த்தி, மகாபலீ ! கபடு சூது அறியா உன்னை வயபபடுததி, வாழ்வைத தீயோர் வளர்த்துக் கொள்கின்றனர். இங்கே ஒரு வைகுந்தம் இருககிறது. இந்த நிரதிசய இன்பத்தில் நிலைத்திரு ! என்று அருளிய மாதவர், அதன்பின் கயவர்

குதறமிகப பாயநது குரைக்கினற நாய்போல்,
அதிர்வுசெய் எண்ணங்கள், என்றே அடங்குவதே!

கொட்டம் அடக்கினர். உத்தமர்கள் அதன்பின் உய்ந்தனர். தீயவரைத் தீர்த்துக் கட்டல், அன்பர்க்கு அருளல் வகையில், 'அளவிடல் அரிய' உபகாரியான திருமால், உமது மாமனர்.

பயன்தரும் குண்டலினி பாம்புருவம் கொண்டது. அமுதொழுகும் பிரமரந்திரத் துவாரத்தைத், தன்வாலால் அடைத்தது. தலைகீழாகத் தொங்கி, மூலக் கனலில் முகங் காட்டி, இதமான இனப நித்திரையில் இருக்கிறது.

அதனுல் ஆன்மா, மாபெரும் பரத்தை மறந்தது; அதன் வழியே அவதிகள் பலவும் அடைந்தது. அங்கிலையில, ஐயோ ! சிவனே ! என்று அலறி வெம்பி அழுதது. அந்த அலறல் தான் பஜனை. அந்த வெம்பல்தான் ஜபம். இதனை யறிந்த சிவனுர் திருவுளம் இரங்கியது.

பொய்யறிவு எனும் சீவபோதம், பரிக்ரக சக்தி எனும் பல பெயர்களாயின. ஏத்துவாரைப் பாதிக்கும் அக் குண்டலினியை, பிட்சை யெனும் பெயரால், இடு! இடு என்று கை ஏந்துகிருர் சிவபிரான். அதை அவர் ஏந்திய கபாலத்தில் இட்டபின், பரம விடுதலைக்குப் பாத்திரமாகிறது ஆன்மா. இவ்வளவு சிறந்த உபகாரம் செய்யும் சிவபிரான், உமது பரமபிதா.

பொய்ப்போதம் இப்படிப் போன பிறகு, தனிப்பெரும் குரு தரிசனம் தாவி வரும்.

'' அகளமாய் யாரும் அறிவரிது, அப்பொருள்
சகளமாய் வந்ததென்று உந்தீ பற !
தானுகத் தந்ததென்று உந்தீ பற !''

[அகளம் - வியாபக சிவம். சகளம் - குரு திருவுருவம். தான் ஆகத் தருதல் - ஆன்மாவைத் தன்மயம் ஆக்குதல்.]

இநதச் சிததாந்த அனுபவம், இஙகுச சிந்திக்கத் தகும்.

உயிர்கட்கு இந்த அனுபவத்தை உணர்த்த, சிவபிரான் ஆன தந்தை சீடர் ஆயினுர். மைந்தரான நீர், குமர குருபரர்

---

கலையென்று பேர்குறித்துக், காம நினைவெழுப்பும்
கலைஞர் களங்கம், கழுவுவதும் என்றேயோ ?

எனும் கோலம் கொண்டீர். குரு சிஷய சம்பிரதாயத்திற்கு, தனிப் பெரும் உறவோ வயதோ தடையாகா; இதனை அறி விக்க எண்ணியதோ திருவுள்ளம்! அறிவார்கள் யாரே!

"நாதா! குமரா! நம" என்று சிறக்க வலம் வந்த சிவனுர் முன், திருவாய் திறந்தீர்! பெருக்கமானது அனுபவம். அதைச் சுருக்கமான மூன்று சொற்கள் ஆக்கினீர்! அவைகள் குழவி மொழிகளாகிக் குளிர்ச்சி செய்தன. அறிவை அறி வது பொருள்; என்னும் அம் மும்மொழிகளே குமரகீதை என்று குறிக்கப் பெறும்.

அறிவிக்க அறியும் அறிவுடையது ஆன்மா. அதனுடன், அருள்நூற்கள் தெரிவிக்கும் செய்தியையும் தெரிந்து கொண் டது; எவ்வளவு தெரிந்து என்ன பயன்? இந்த இருவகையா லும், இறைவன் சொரூபத்தை அறிந்து கொள்ள இயல வில்லை. அதனுல்தான கற்றவர்கள், தாம் கற்ற செய்தியை, யுக்தி பல கூட்டித் தம் கடைவிரிக்க லாயினர். அதனுல் பணத்தைத் தேடலாம். புகழை யடையலாம். தம்போல கற்றவர்தம் காய்ச்சல் காணலாம். முடிவு என்ன? கால் சாய்ந்து போவதுதான் கண்டபலன்.

ஐயோ! எதற்குப் பிறந்தோம்? எதற்குக் கற்ருேம்? அவம் தரு நினைவு அகன்றது இல்லையே! பாவத்தைப் பெருக்கிப் பதைத்து இருக்கவா? இதுவா எம் தலை விதி?

கற்ற அறிவால் பொருள் உணர்ந்து போற்றி, சேட்டை யற்று ஜெபித்து, அழுந்தித் தியானத்தில் அமர்கின்ற போது, கற்றதால பெற்ற தெல்லாம் கரந்து போக, இயலபான ஆனம அறிவும் இல்லாது தீர, இடையில் எழுகிறது தெய்வ அறிவு. அது, ஒளி மயமாகி உணர்வில் உறவாடுகிறது. ஆஹா! அற்புதமான இந்த அனுபவம பெற்றேன என்று, ஓதவும் இய லாது ஒடுங்குகின்ற நிலையில், மனமடங்கிய மவுனம். அங்

மதியிழந்தார்; வாய்மை வளமிழந்தார்; காமச்
சுதிகூட்டி, மக்கள் அறிவுசுழிக் கின்ருரே.

நிலையில், பெயர்த்து போகாத பேரின்பம் பெருகுகின்றது. அதன்பின் செய்தி, நான் அது ஆதல் எனும் மகாவாக்கிய ரகசியம்.

''அறியாமை அறிவாதி பிரிவாக ; அறிவரர்கள்
அறிவாக நின்ற நிலையில்,
சிந்தையற நில் ! என்று சும்மா உணர்த்தி, மேல்
சின்மயா நந்த வெள்ளம்
தேக்கித் திளைத்து நான் அதுவா யிருக்க நீ
செய் சித்திரம் மிக நன்று காண் !
மந்திர குருவே ! யோக தந்த்ர குருவே ! மூலன்
மரபிலவரு மவுன குருவே !'' என்று தாயுமானாரும்,

'' நெருங்கும் அடியார்களும் நீயும், நின்று நிலாவி விளையாடும் மருங்கே சார்ந்து வர எங்கள் வாழ்வே! வா என்று அருளாயோ!'' எனும் திருவாசகமும் இங்குச் சிந்திக்கத் தகும்.

வித்தக இவ்வனுபவம் விளங்க, 'அறிவை அறிவது பொருள்' என்று அருளினீர் !

மற்றவை எல்லாம் வெற்று ஆரவாரம். 'அறிவும் அறியாமையும் கடந்த அறிவு திருமேனி'; அந்த அறிவை அறிவது அனுபூதி. (அனு—உடன் ; பூதி— ஆதல்.)

''செறிவற்று, உலகோடுரை சிந்தையும் அற்று, அறிவற்று, அறியாமையும் அற்றதுவே'' எனப் பெறும் இச் சாதனையில், பேசா அனுபூதி பிறக்கும்'' (ஓம். ஓம். ஓம்.)

சொல்லிக் காட்ட முடியாத இந்த அனுபவத்தை, ஒரு காலத்தில் சனகாதி முனிவர்கட்குத தட்சிணாமூர்த்தி, ஞான முத்திரையால் சுட்டிக் காட்டினார். பெருமா! நீரோ அச் சிவபிராற்கு, 'அறிவை அறிவது பொருள்' என்று அரிய சொற்கள் மூலம் அருளினீர்; இப்பெருதவி செய்த உம்மை,

---

ஆடல் பாடல அழகு ஆயப் புகுந்து, மதி
வீடிக், குணங்கோணி வீழ்ந்தகதை எத்தனையோ ?

பெரியோன் எனும் பொருளில், பெருமானே! என்று அன்போடு கூவி அழைக்கின்றோம்.

சரியையிற் பிறக்கும்; கிரியையில் வளரும்; யோகத்தில் பாகம் எய்தும்; இங்ஙனம் குமரியாம் ஆன்மாவை மணக்கும் [1]குமரா! உமக்கே அடைக்கலம்!

மணாளர் குரு; மனைவி மாணவி; அவட்கு அனுபவம் காட்டும்[2]குருபரா! உமக்கே அடைக்கலம்!

எண்சாண் உடலினர் யாம்; "குருபுங்கவன் எண் குண பஞ்சரன்" ஆன [3] குணதரா! உமக்கே அடைக்கலம்!

உழைப்பிற்குப் பகல், ஓய்விற்கு இரவு என்பர். அதற்கு மாறாகி, தம் அறியாமை வெளிப்பட, நள்ளிரவில் பாதக சாதகம் பல செய்து பல்லிளிக்கும் அவுண இருளை யழிக்கும் [4]திமிர தினகரா! உமக்கே அடைக்கலம்!

அமைதி, ஒளிமயம், அருள், உக்ர உதயமான [5]சரவண பவன் எனும் ஆறு எழுத்தாளா! உமக்கே அடைக்கலம்!

மலைமேலாள் மாதேவி; அவள் தந்த நீயும் மலைமேலான்; அக் கிரிராஜ குமாரி தந்த [6]குமரா! உமக்கே அடைக்கலம்!

பாவத்தைக் கழுவும் பரம கங்கை; அதன் அலைமேலான்; அதன் தலைமேலான் எனப் பெறும் [7]பகிரதிநதி சுதா! உமக்கே அடைக்கலம்!

அகத்தும் புறத்தும் வைதிகை இந்திர மகள்; அகத்தில் வைதிகை குறவர் மகள். அன்பு கொண்ட இருவரும் [8]மருவிய திரள்புய! உமக்கே அடைக்கலம்!

இளமையும் அழகும் மணமுமான ஓம்பொருள் ஒளிமய [9]முருகையா! உமக்கே அடைக்கலம்!

திருமால் [10]மருகோனே! உமக்கே அடைக்கலம்!

[11]அறிவை அறிவது பொருளென அருளிய பெருமானே! உமக்கே அடைக்கலம்!

---

உளளததில் ஒன்றை, உருவாக்கிக் கொண்டபினர்,
மெள்ளச் செயலாகி, மேவுவது காணீரோ?

*இங்ஙனம் ஓத ஓத, உள்ளம் உருகும்மே! உருகினர் முன் உவந்து வந்து அருள்வையே!*

ஊன்றி இதனை உணராது, சிற்றின்பச் சேற்றில் சிக்கிச் சீரழிந்தார் செய்தியை எண்ணும் இதயம் இடிகிறதே!

உமக்கே அடைக்கலம் என்று எம்மை ஒப்படைத்தேம்! அதைத் திருவுளங் கொண்டிருந்து, திருவண்ணாமலையில் ஒரு சமயம், புனித அடியவர் புடைசூழ, ஓம் ஓம் எனும் வேத போத நாதமெழ, கலந்துகொள் எனும் பொருளில் கலகல கலகல எனத் திருவடிச சிலம்பொலிக்க, சேவை தந்தீர்!

அந்த அனுபவத்தை, கனவிலும் நனவிலும் மறக்குமோ அடியேன் மனம் என்று, கண்ணீரைக் காணிக்கை யாக்கிக் கந்தப் பரமன் திருமுன் [illegible]

வாழ்க திருப்புகழ் வனம்

---

## கொற்றவனும் குழந்தையும்

[ஆ. கி. ரங்கராஜன்.]

அகில உலகினர் அனைவரும் அடி பணியும் அரசனும் முருகன். இது உண்மையா? அனைவருமா முருகனை வணங்குகின்றனர்?

முருகனை வணங்கினாலென்ன? வணங்காவிட்டாலென்ன? அவன் எவரையும் தானாகவே வணங்கும்படி செய்து விடுகிறான்! இதற்குக் காரணங்கள் பல. சிலவற்றை ஆராய்வோம். துன்பம் நீங்கி இன்பமாக வாழவேண்டுமெனில், அவனை எத்தகையோரும் வணங்கித்தான் ஆக வேண்டும்!

---

உள்ளம், அறிவு, உடல்தந்த தெய்வம், நம்
கள்ளத் தனங்களைக் காணுமென நாணுவமே.

பண்டைய கால அரசர்களின் கையில் கோல் ஒன்று உண்டு. அக்கோலுக்கு செங்கோல் என்பது பெயர். செம் + கோல். செம் = கருணை ; கோல் = ஆட்சி. எவர்பாலும் கருணை பாலிக்கும் ஆட்சியைப் புரியும் அரசன் என்பதற்கு அக்கோல் ஓர் அடையாளமாம். அரசர்கள் கடமை யாதெனில், பாரபக்ஷமின்றி அரசு புரிதலே யாகும். ஆனால் அரசர்களின் ஆட்சியில் பிழை நேருவது உண்டு. அப்போது அந்த செங்கோல் வளைந்து விடுமாம். செங்கோல் வளையுமாயின், அறநெறி தலைசாயும். அதர்மம் தலைதூக்கும்.

ஆத்திரத்தில் அறிவழிந்த தக்கனின் செங்கோல் வளைந்த காரணத்தால், அவனியில் குழப்பம் விளைந்தது. அதன் காரணமாகத் தோன்றிய அதர்மமானது அரக்கர்களாக உருவெடுத்தது. 'எவருக்கும் பணிய மாட்டோம்!' என இறுமாந்திருந்த இமையவர் வாழ்வைக் குலைத்தது. அவர் நாட்டை அழித்தது. எவருக்கும் பணிய மாட்டோம்!' என்று, எண்ணற்ற இடர்களை எவ்வுலகினர்க்கும் இழைத்தது. சகிக்க முடியாத துன்பங்களால் சகல லோகநாதனாகிய இறைவனை அனைவரும் சரணடைந்தனர்.

எங்கும் நிறைந்த இறைவன், எவர்க்கும் இன்பம், ஆனந்தம் என்பதே வழங்கும் இயல்பினன். எனவே அவனை, 'சிவநிதி' என்று அழைததுப போற்றுவர். சிவநிதி இன்பத்தை வழங்கும் வள்ளல் ஆதலின, சரணடைந்தவர்களைக் காப்பாற்றுவதாக வாக்களித்துத் தனது குமாரனாகிய முருகனை அழைத்து, அரக்கர்களை அழித்து வருமாறு ஏவினன். உத்தமத் தாயும், உலகீன்றவளுமாகிய உமையவள் அரியதொரு வேல் ஒன்றைக் குமாரனாகிய முருகனுக்கு வழங்கினள்.

முருகனும் சிறிதும் தளர்ச்சியின்றிச் சென்று, மாயக் கிரவுஞ்ச கிரியைத் தகர்த்து, தானவர்குலப் பூண்டைக்

---

நினைப்பிற்குத் தக்கபயன், நீளுமிது உண்மை ;
இனையதனைச் சிந்திப்பம் ; இறைவடிவை எண்ணுவமே.

களைந்து, தந்தையுள்ளம் மகிழுமாறு செயலாற்றினன். அவனது செயலினுல் தனது அன்பர்கள் அனைவருமே இன்ப மெய்தியதைக் கண்ட இறைவனுகிய கண்ணுதலோன், மட்டற்ற மகிழ்ச்சியால், "குமரேசா!" என அழைத்து வாரி யணைத்துத் தழுவிக் கொண்டனன். (குமரா! = இளம் பாலகனே! ஈசா = என் இறைவனே!) சாதாரணமாகவே, தாய் தந்தையர்கள் தம் குழந்தைகளைக் கொஞ்சும்போது என் அப்பனே! என் ராஜாவே! என்று கூறித் தழுவுவர். அதைக் கருதுமிடத்து, செயற்கரும் செயல்புரிந்த தனயனை 'இறைவனே!' எனத் தன்னிலும் மேலாகப் பரமன் புகழ்நதது வியப்பன்று.

இத்தகைய தன்மை கொண்ட முருகன் தனது கரத்தில் ஒரு செங்கோலை வைத்துக் கொண்டிருக்கின்றுன். அக்கோல் நிறத்திலும் சிவந்தே விளங்குகிறது அது அறநெறியைச் சிறிதும் தளரவோ, தடுமாறவோ விடாமல் பாதுகாக்கிறது. அதுதான் சுடர்வடி வேலாயுதம். அதனை அயில வேல் என்றும் கூறுவர். அதனையே முருகன் செங்கோலாசக் கொண்டு சகல உலகங்களையும் பரிபாலிக்கின்ருன். இதைக் குறிப்பிட்டுத்தான் அருணை முனிவர், முருகனை 'அடி அந்தமிலா அயில்வேல் அரசே!' என அழைக்கின்ருர். அரசர்களாக இருக்கும் பிறரின் செங்கோல சில சமயங்களில் வளையக் கூடும். ஆனுல முருகனுடைய செங்கோல் வளையாது. அது அன்பர்களை ஆதரிககும். அற்பர்களை அழிக்கும.

அரசர்களாக இருப்போர் முன் நாளில் மாறுவேடத்தில் நகர சோதனைக்குப பகலிலோ இரவிலோ வெளிப்பட்டு எவற்றையும் எவரையும் பரீக்ஷிப்பராம். அதுபோலவே முருகன் தனது அன்பர்களையோ, பேரறிஞர்களையோ, மற்றவர்களையோ பல்வேறு வகைகளில் பரிசோதிப்பானும். அவனது சோதனைக்குட்பட்ட பெருந்தகையோர்கள், அகத்தியர், இடும்பன், பொய்யாமொழிப் புலவர், ஔவைப் பிராட்டியார், மற்றும் பலர். இவர்களைத் தவிர முருகனின் அருளினுல் பேரின்ப நிலை எய்திய பெரியார்கள் இராமலிங்க அடிகள்,

---

கற்ற கலையும், கடவுள்தரும் நல்லறிவும்
உற்றே எப்போதும் உதவுகென வேண்டுவமே.

அருணகிரிநாதர், தியாகராஜ ஸ்வாமிகள் முதலிய எண்ணற்றோர். ஆனால் இத்தனை பேர்களும் பக்தியில் கரை கடந்தவர்கள். தவவலிமைச் செல்வம் படைத்தவர்கள். ஞானத்திலும், யோக மார்க்கத்திலும் மிகப்பெரும் உயர் நிலையில திகழ்பவர்கள். இவர்களனைவரும் முருகப் பேரரசனின் பிரஜைகள் !

முருகன் எவ்வளவு பெரிய அரசனாய் இருந்த போதிலும், அன்னை என்று ஒருத்தி இருந்தால், அவளுக்கு அவன் ஒரு பாலகன தானே ? ஆனால அவன ஒரு செல்லக் குழந்தை தான. அவன் மீதோ அததாய்க்கு உள்ள பாசமும் பெருமையும்தான் என்ன! அவனைச் சீராட்டி, அமுதூட்டி, மகிழ்வூட்டி, அதன் பின்தான் அவுணர் உயிரை ஓட்டுவதற்கு வேலாயுதம் வழங்கினாளாம் !

செல்வம் அதாவது நிதி என்பதற்குப் பூரண அதிகாரமும் உரிமையும் பொறுப்பையும் படைத்தவள் லக்ஷ்மி தேவியே எனினும், அவளது மருகன முருகன் ஆதலின, அவன் மீதுள்ள அன்பினால், சங்கநிதி, பதுமநிதி முதலான ஒனபது வகைச செல்வங்களையும் அவன் வசமளித்து, "இவற்றிற்கெல்லாம் நீ அதிபனாக இருந்து உத்தமர் அனைவர்க்கும் அளிதது உதவுவாயாக!" எனறு அனுமதித்திருக்கிறாளாம் !

இவ்வாறு பெற்ற முருகன் அதிக ஆனந்த மடைந்து, தனது கடமைகளை ஆற்ற எங்கெங்கு அடியார்கள் தன்னை எவ்வெவ்வாறு பஜிக்கின்றார்கள் எனபதைக காணத் தன மயிலில் அமர்நது சென்று, அன்பர்கள் பாடும் பஜனை முதலிய நாதகீத வெள்ளததில் லயித்துத் தானும் நாதஸ்வரூபமாகி, அவர்கட்கெல்லாம் அருள்புரிந்து கொண்டிருககினறான். எப்படி முருகனின் லீலை! இவ்விவரங்களை யெல்லாம் அடியார்கள் குறிப்பிட்டு, முதலில இறைவியாகிய அனனையைப் பிரார்த்திக்கும்போது,

மாட்டிடையன் எனவந்து, மாபெரும் ஓர் புலவி எனும்
பாட்டிதனக் கருள் புரியும் பாலகனும் வேலனைநீ
ராட்டி, அமுதூட்டி, மகிழ்வூட்டி அவுணா உயிரை
ஓட்டிடவே ஒரு வேலை உதவியநல் ஒண்டொடியே !

---

ஆடை வெளுப்பாகக் கட்டும் அறிவேபோல்,
கோடாமல், நம்மனத்தைத் தூய்மைசெய்து கொள்வோமே.

என்றும், அடுத்து (அறுமுகக்) குழந்தையாகிய முருகனைத் தொழும் போது,

தவநிதி தழைத்திடும் யோகியர், ஞானியர்
குவலய மதில் தொழும் கொற்றவ! சீரார்
*நவநிதிக் கதிபா! நாத ஸ்வரூபா!*
சிவ நிதி மகிழ் குமரேச! சண்முகனே!

எனவும் பாடித் துதிக்கின்றார்கள். நாமும் முருகனைப் பாடிப் பணிவோம்.

---

## பரங்கிரிப் புராண வரலாறு

(வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

இனி, நிரம்ப அழகிய தேசிகர் பாடிய திருப்பரங்குன்றத்துப் புராண வரலாறு பின் வருமாறு:—

சங்கப் புலவர்களில் தலைமை வாய்ந்த நக்கீரனார் சிறந்த சிவ பக்தர். அவர் ஒரு விரதங் கொண்டிருந்தனர். அஃதாவது தாம் தெய்வமென்று வழிபட்டுத் தமிழ்ப் பாமாலை சூட்டுவது அங்கயற்கண்ணி (மீனாட்சி) பாகனும் சோம சுந்தரப் பெருமான் ஒருவருக்கே; தாம் மானிடனைப் பாடுவது தமிழ்ச் சங்கத்தை ஆதரிக்கும் மாறன் (பாண்டியன்) ஒருவனையே என்னும் விரதமே. அந்தோ பாவம்! விதிக்குத் தகுந்த மதி தானே! *செந்தமிழ்க் கடவுளைப் பாடாத நாவும் நாவாகுமோ?* குமாரக் கடவுளின் திருவருள் பெறுநார் தமக்குக் கொடுமை வருங்காலத்தை உணர்வரோ! உணரார்!

"கூடல், அங்கயற்கண் பாகனன்றி, மானிடரில்
மாறனன்றி அகிலந் தனனுட்
துங்கமெழுந் தமிழ்மாலை தொடுப்பதிலை
என்று கொண்டான், தூயரேனும்
வெங்கொடுமை வருங்காலம் அறிகுவரோ
குமரனருள் மேவிலார்கள்"

இவ் விரதச் செருக்கால் இப்புலவர் பெருமான் முருகப்பிராற்கு ஒரு பாமாலையேனும் சூட்டினாரில்லை. பிரமனைக் குட்டி யடக்கிய செட்டிக்குக் கீரரை யடக்குவது பெருங்காரியமோ? தம்மைப் புறக்கணித்த இத் தமிழ்ப் புலவரைத் தடுத்

---

*மானமா வாழும் மனையறத்தில்,* மோசமாம்
ஈனநிலை நேராமல், ஈசா!கா! என்போமே:

தாட்கொள்ள நினைத்த எம்பெருமான் அவரிடம் தமிழ்ப் பாமாலை பெற ஒரு சூழ்ச்சி செய்தனர். தமது கருத்தைக் குறிப்பாற் பக்கத்துறையும் நாரதருக்குத் தெரிவித்தனர். அவரும் அதை உணர்ந்து நக்கீரர் மதுரையினின்றும் திருப்பரங்கிரிக்கு வருகின்ற சமயம் அறிந்து முருகபிரானுக்குத் தெரிவித்தனர். முருகரும், பூத கணங்களாகிய "உக்கிரன்", "அண்டாபரணன்" என்பவர்களை அழைத்துப் "பூதப்படை வீரர்களே! இந்த மூடனாகிய நக்கீரன் தினந்தோறும் மதுரையிலிருந்து நமது திருப்பரங்குன்றத்திற்கு வந்து தாமரை மலர்களால் அலங்கரிக்கப் பெற்ற சரவணப் பொய்கையில் நீராடிச் செல்கின்றவன் நம்மைத் தரிசனம் செய்யாமல், நாம் வேறு சிவம் வேறு என்ற பேத புத்தியுடன் செல்கின்றான் அவன் பேத புத்தியைத் தடுத்தாட் கொள்ள வேண்டும். ஆதலால் அவனை நம்முடைய மலையின் முன பாகத்தில் இருக்குங் குகையில் தள்ளி வாயிலை நன்றாக அடைப்பீர்கள்" என்று உத்தரவு அளிததனர். பின்பு ஒரு நாள் திருப்பரங்குன்றத்துத் தீர்த்தக் கரையில நக்கீரர் வழக்கப்படி சிவ பூசை செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது பூதப்படை வீரர் நக்கீரரது தபோவலியினால் அவரிடம் செல்ல அஞ்சி, அவர் தவத்தை அழிகக மாயோபாயத்தினால் அக்குளக கரையில் இருந்த அரச மரத்தின் இலை ஒன்றைப பாதி தணணீரிலும் பாதி கரையிலும் விழும்படி விடுத்தனர். அந்த இலை தணணீரில் விழுந்த பாகம் மீனாகவும், கரையில விழுந்த பாகம் பக்ஷியாகவும் மாறி ஒன்றை ஒன்று இழுககக் கணட நக்கீரர், சிவ பூஜையை விடுத்து, இது என்ன அதிசயம் என்று மயங்கி, மீனும் பறவையும் படும் வேதனையை நீககக் கருதி, அவையிரண்டையும் பிரிப்பதற்காக, அவையிரண்டின உடலையும் ஒன்றோடொன்று சேர்த்திருந்த நரம்பைக் கையாற் கிள்ளினர். நல்லது கருதிச் செய்த இச் செயல அவர் எதிர்பாராத வண்ணம் தீமையாக முடிந்தது. ஏனெனில் அங்ஙனம் கிள்ளின உடன், மீனும் புள்ளும் துடிதுடித்துக் குருதி கக்கி இறந்து பட்டன. உடனே பூதங்கள் "எங்கள் முருக பிரான் உறையும் திருத்தலத்தில் என்ன பாவம் செய்தனை" என்று கூறிப பாசக் கயிற்றினால் அவரைக் கட்டிக் குகையில் அடைத்து வாயிலை அடைத்துச் சென்றன. இதனை,

" இறங்கிக் கையுகிரார் கிள்ளியிடக் கயலும் புள்ளும்
குன்றியுடல் புரண்டு புரண் டங்காந்து
வாய்பிளந்து குருதி கக்கிப்
பொன்றிடுங்கார கணமுடித் துடித்தயர்ந்து
குபபுறவே புலர்ந்த அம்மா !"
" அக்கணததில உக்கிரன அண்டாபரணன்
பற்கடித்தே அழனறு சீறிக
கக்குநரு அருவிதவழ் கடம்பனுறை
பரங்கிரியிற் கடிய பாவம்
இக்கொலையாம் பாதகஞ்செய் தனையென்று
வென்னறைந்து வெருவப் பற்றிப்
புககபெரு மலையினமேற் குகையடைதது
பாறை கொண்டு புதைத்தார் மனனே !"

—என விளககினா பரங்கிரிப் புராணமுடையார்.

குகையில் அடைபட்டார்; என செய்வா தமிழப புலவர். நெட்டுயிர்த்தார்; அயாநதார்; சிநதை நைந்து, சிலநாள அவ் விருட் குகையிற் காலங கழித்தார். பினனா முருகன திருவரு ளாலே, 'மயிலிலேறுங கந்தனுககுத் தமிழ் சூட்டாக காரணம் ஈதெனனும்' உண்மை அவர் மனததில உதித்தது: உடனே சுவையூறுந தமிழமாலை ஒனறு, "உலகம்" என எடுததுக் "கிழவோனே" எனறு ஆறறுபபடையாகப பாடி முடிநதனர்; அனறிரவு குமரவேள நககீரனுற கனவிற தோனறி, "அவனி தனிற் கிழவனென வரச சிறிது நாளாம்" எனக கூறி மறைந் தனர். நக்கீரா உடனே விழிதது,

'எனறு மிளையாய்' என வருமாறு :—

" குன்றமெறிநதாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புனறலைப பூதப பொருபடையாய—எனறும
இளையாய அழகியாய் ஏறூாநதான ஏறே
உளையாய என உளளத் துறை "—

என்னும் அருமைப பாடலைப் பாடினர். நமதாணடவனும் தாம் கொண்ட காரியம் நிறைவேறிற்று என மகிழ்நது தமது வேலாயுதத்தாற் பாறையைப் பிளநது பாவலரைக் குகையி னினறும் வெளியேற்றினர்.—

இதுவே திருப்பரஙகுனறத்துப் புராணத்தின்படி திருமுரு காற்றுபபடையின வரலாறு.

# ஆதாரம் இலேன்

(கி. வா. ஜ.)

இறைவனுடைய அருளைப் பெறவேண்டும் என்ற எண்ணமே பலருக்கு உண்டாவதில்லை பேச்சினிடையே அவனருள் வேண்டும் என்று சொல்வார் பலர் உண்டு. ஆனால உண்மையாக அதற்காக ஏங்கி நிற்பவர்கள் மிகமிகச் சிலரே.

உலகியலில் ஈடுபட்டவர்களுக்குத் தம்முடைய அறிவு, ஆற்றல், செல்வம் ஆகியவற்றைக் கொண்டு எல்லாவற்றையும் சாதித்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் உண்டாகும். அவர்கள் தம் வாழ்க்கையில் சில முயற்சிகளில் வெற்றியைக் கண்டு விட்டாலோ, இநத எண்ணம் மிக்க வலிமையுடன் உள்ளத்தில இடம் கொள்ளும்.

தம் இடததில் ஏதேனும் ஆற்றல் குறைவாக இருந்தால் அதைப பிற பொருள்களைக் கொண்டும், பிற மக்களைக் கொண்டும் பெற்றுச் செய்யவேண்டிய காரியத்தைச் செய்து முடிக்கலாம் என்ற கருத்தும் பலருக்கு இருககிறது. இந்த எண்ணம் இன்று நேற்று வந்தது அனறு. பழங்காலத்தி லிருந்தே மனிதன் இந்த எண்ணம் உடையவன்.

அவன் தன்னுடைய கைக்குப் போதிய பலம் இல்லா விட்டால் கருவியைக் கொண்டு ஈடு செய்தான். அவன் தன் கையால் நிலத்தைப் பறிக்க இயலாது. மண்வெட்டியையும் கடப்பாரையையும் கண்டுபிடித்து அவற்றைப் பயன் படுத்தி ஞன். அவனுக்கு ஓரளவுதான வேகம் உண்டு. ஆயினும் குதிரையின் வேகத்தைப் பயன்படுத்திக் கொண்டான். அவனால் உழ முடியாது. மாடுகளை ஏவி உழச்செய்தான்.

---

இன்பமே வாழ்வில் இருப்பதனை எண்ணமல்,
துனப வழியில, தலைதுறுத்தல் என்னேயோ.

யானையின் பலத்தை அவன் தனக்கு உதவும்படி ஆக்கினுன். இதுமட்டுமா? மக்களில் அறிவுடையவரையும் ஆற்றலுள்ள வரையும் பணம் கொடுத்துத் தனக்காக உழைக்கச் செய்தான். அறிவுடையவனே பணக்காரரைப் பணம் கொடுக்கவும் உழைப்பாளிகளை உழைக்கவும் செய்து வேலைவாங்கினுன்.

இப்போது, உலகிலுள்ள பண்டங்களையும் விலங்குகளையும் மக்களையும் வேலை வாங்குவது போதாதென்று, ஐம்பூதங்களையும் தன் விருப்பப்படி இயக்கிப் பெரிய காரியங்களை நடத்தத் தொடங்கிவிட்டான் மனிதன். நீராவியால் வண்டி ஓட்டுகிருன். எண்ணெயினுல் கார் ஓட்டுகிருன். நீரினுலும் நிலக்கரியாலும் மின்சாரத்தை உண்டாக்கி அதைக் கொண்டு எத்தனையோ காரியங்களைச் செய்து கொள்கிருன். ஆகவே தன்னுடைய முயற்சியினுல் எல்லாவற்றையும் நடத்திக் கொண்டு போகும் மனிதனுக்கு இறைவனைப் பற்றிய கவலையோ, கவனமோ வருவதற்குச சந்தர்ப்பமே இல்லை.

இந்த யந்திரயுகத்தில இறைவனை எண்ணுவதே அரிது; அப்படி எண்ணினுலும் அப்படி ஒருவன் இருககிருன எனறு உண்மையாக நம்பிகைகை கொள்வது பின்னும் அரிது. ஒருகால் அந்த நம்பிக்கை இருந்தாலும் அவன் அருளால தான் யாவும் நிகழ்கின்றன எனற உணர்வு வருவது அதனினும் அரிது. உலகியலுக்கு அப்பாற்பட்ட இனபநிலை ஒன்று உண்டு, அதனைப் பெறவேண்டும் என்ற ஆசை உண்டாதல் மிகமிக அரிது.

அவனருள் வேண்டும் என்ற ஏக்கம் எளிதிலே ஒருவனுக்கு உண்டாகாது. அப்படி உண்டாலுைம் தனனுடைய சொந்த முயற்சியினுல் அதைப் பெறுவதும் எளிதன்று. நாம் அவனருளைப்பெறவேண்டும் எனறு எணணி முயல்வது பாதிக

கஙகைச சுழலில், கலஙகார்போல் ஆகாமல்,
கங்கா தரனருளைக் காசினியிற் காண்பேமோ ?

கல்யாணம் ஆனது போன்றது. வீரம் செறித்த காளை ஒருவனை மணம் செய்துகொள்ள ஓர் அழகிய பெண் ஆசைப் படுகிருள். முயற்சியும் செய்கிருள். அவள் முயற்சியினுல் மட்டும திருமணம் நிகழாது. அது ஒருதலைக் காமம் என்று பெயர்பெறும். அந்த இளமைந்தனும் அவளை விரும்ப வேண் டும். அவன் அவளையே மணந்துகொள்ள வேண்டும் என்று தீவிரமாக எண்ணி முயற்சி செயதால், அந்தப் பெண் முயன் ருலும் முயலாவிட்டாலும் கல்யாணம் நிறைவேறிவிடும். அவன் வலியுடையவன் அல்லவா?

அவ்வாறே நாம் இறைவன் அருளைப் பெறவேண்டும் என்று ஏஙகுவதனுல் மடடும் பயன் இல்லை. இறைவனும் நமக்கு அருள வழங்கவேண்டும் என்று திருவுள்ளம்கொண்டு, உண்மையைச் சொல்லப்போனுல் அவன நமக்கு அருளை வழங்க வேண்டும் எனற எண்ணம் கொணட பிறகே நமக்கு அவனுடைய அருளைப்பற்றிய நினைவே எழுகிறது.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" எனற மணி வாசகர் வாக்கு, அவனருளே வழிகாட்ட வேண்டும் என்று புலப்படுத்தவில்லையா!

"என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினைக்கத் தருகின்ருன"

என்பது நம்பியாண்டார் நம்பி வாக்கு.

இறைவன நம்மை நினைந்தால் நாம் அவனை நினைப்போம். "நினைப்பித்தால் நினனை நினைப்பேன்" என்ருர் ஒரு பெரியவர்.

இந்த உண்மையை அருணகிரியார் எடுத்துச் சொல்கிருர். "எம் பெருமானே, நான் ஏதேனும் ஒன்றை நினைநது அதைச் செய்யலாம் என்ருல், அதற்கு உரிய ஆதாரம் ஒன்றும் இல்லாதவன நான. எது செய்தாலும் அஸ்திவாரம் இன்றிச செயதால அது நிலையாது. நான எண்ணும் எண ணங்கள நின அருளாகிய ஆதாரம் இல்லாவிட்டால வெறும் கனவாகப் போய்விடும். ஆகவே ஆதாரம் இல்லாத நான

---

சோகமாம் வாழ்க்கையினிற், சொக்கி விழுவாரை,
ஆஹாஹா! வாதம்பீ! என்றணைத்துக் காபபோமே.

இதோ ஒன்று சொல்லுகிறேன், திருச்செவி சார்த்தியருள வேண்டும" என்பது போலத் தொடங்குகிறார்.

ஆதாரம் இலேன்.

உன்னுடைய அருளைப் பெறவேண்டும் என்ற ஆசை மட்டும் இருக்கிறது. அதைப் பெறுவதற்குரிய ஆதாரம், உரிமையைக் காட்டும் சான்று ஏதும் என்னிடம் இல்லை. ஆகவே, நான் எத்தனை நினைத்தாலும் அது கிடைக்கவில்லை. நின் அருளை நான் பெறவேண்டும் என்று நான் நினைத்துப் பயன் இல்லை என்பதை இப்போது உணர்ந்து கொண்டேன். அதை நீ நினைக்க வேண்டும் "இவன் ஏழை, ஆதாரம் இல்லாதவன். இவன் நம் அருளைப் பெற்று வாழவேண்டும்" என்ற நினைப்பு உன் திருவுளத்தில் எழவேண்டும். அப்போதுதான் உன் அருளை நான் பெறமுடியும்.

'நான் நல்லவன்; தவம் செய்தவன்; பொறி புலன் ஒடுங்கியவன்; ஞானம் பெற்றவன்' என்ற காரணங்களை ஆதாரமாகக் கொண்டு, "ஆகையால் நீ நின் அருளை வழங்கு" என்று ஒருகால் கேட்கலாம். அத்தகைய ஆதாரம் எனக்கு இல்லை. பணம் கொடுத்து அரிசி வாங்க இயலாத ஏழைபால் இரங்கி, "இந்தா அரிசி" என்று கடைக்காரர் தருமம் பண்ணினால் தான் அவன் அரிசி பெறமுடியும். வேறு வகையால் பெறுவதற்கு அவனிடம் பணம் இல்லை; செல்வாக்கு இல்லை; ஆதாரம் இல்லை.

இந்த நிலையில் தம்மை வைத்துக்கொண்டு இறைவனிடம் முறையிடுகிறார்.

'எம் பெருமானே! எந்த விதமான ஆதாரமும் இல்லாத அடியேன் உன் அருளைப் பெற இயலாது. ஆனால் கருணையினால் நீ, இவன் நம் அருளைப் பெறட்டும் என்று திருவுள்ளம் கொண்டால் அது எனக்குக் கிடைக்கும். ஆனால் நீ சிறிதளவாவது இத்தகைய எண்ணத்தைக் கொள்ளவில்லையே!' என்று ஏங்குகிறார்.

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற் றும்நினைந் திலையே!

---

வாழ்க்கையில், தீமையினில் ஆழாத வாய்மையினர்,
வாழ்விக்கும் தெய்வ அமைதிவளர்க் கின்றாரே.

# உபநிஷதங்களின் உள்ளொளி

(ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி)

*சென்ற இதழ் தொடர்ச்சி—*

இப் பிரபஞ்சத்தில் எதுவும் தன் போக்கில் சுழலுவ தில்லை. வான வெளியைச் சற்று நேரம் நிமிர்ந்து பார்ப்பவர் களுக்கு ஒரு வியப்பு நிச்சயமாக ஏற்படத்தான் செய்யும். கணக்கற்ற நக்ஷத்திரங்களும், கிரகங்களும் ஒன்றோடொன்று மோதாமல் எத்தனை நியதியுடன், எத்தனை ஒழுங்கான 'கதி' யில் சுழலுகின்றன ! இவற்றைப் பார்க்கும் போது அவற்றின் அருகில் யஜமானன் ஒருவன் உருவின சாட்டையோடு, தவறிப்போனால் அடிவிழும் என்று பயமுறுத்திய வண்ணம் நிற்கின்றானோ என எண்ணத் தோன்றுகிறதல்லவா! எவ னொருவன் தன்னிடமிருநது இந்தப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித் தானோ அந்த பிரம்மன பேரறிவின் உறைவிடமாவான். அப் பேரறிவின் ஆக்ஞைககுக் கட்டுப்பட்டு இப்பிரபஞ்சம் ஆடுகின்றது. அவன் ஆக்ஞை ஓங்கி நிற்கும் இடி முழக்கம் போல் இருக்கிறது. அம்முழக்கம் பெரும்பயம் விளைவிப்ப தாக உளளது. சிருஷ்டி, ஸ்திதி, லயம் இவையெல்லாம் ஒரு பெரும் தெய்வ நியதிப்படி நடக்கிறது. மேலாம் பரம்பொருள் நம் மனதில் தோன்றும் ஒவ்வொரு எண்ணத்திற்கும், சலனத் திற்கும் விருத்திக்கும் சாக்ஷி எனவும், அப்பரம் பொருளே பிரபஞ்சத்தின் பீஜம் எனவும், இவ்வுலகை ஓர் உயர்நத மாறாத தெய்வீக நியதிப்படி நடாத்துகிறது என்பதையும் எவன் அறிகிறானோ அவன அமரத்துவத்தைப் பெறுகிறான.

இப்படி இரண்டாம் மந்திரத்தில் தெய்வ நியதியையும், எல்லாவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானம் அவன் எனபதையும் விளக்கிய காலதேவன மற்றொரு முறையில் இதை இன்னும் விரிவாகக் கூறுகிறான். பிரம்மத்தினிடம் கொண்ட பயத்தின் காரணமாகவே நெருப்பு எரிகிறது. சூரியன் பிரகாசிக்கிறான். அதனிடத்துள்ள பயத்தாலேயே இந்திரன், வாயு, காலன் இவர்கள் சலிக்கின்றனர்.

---

காக்கக் கடவுளுண்டு, எனறு கருதுனரை,
*ஏக்கம்செய் விக்க, எவராலும் ஆகாதே,*

ப்ரம்மம் அல்லது பரம் பொருள் இல்லாத பக்ஷத்தில் தனது மேலான சங்கல்பத்தின்படி, இப் பிரபஞ்சத்தை ஆட்ட வும், அடக்கவும், இப்பிரபஞ்சம் முறையாகச் சுழலச்செய்ய வும் ஒருவன் இல்லாத பக்ஷத்தில், இன்று நாம் இயற்கையில் காணும் ஒரே சீரான முறையான அமைப்பைக் காணமுடி யாது. எல்லாம் கடந்த பரம்பொருளிடம் பஞ்சபூதங்களின் அதி தேவதைகள் பயபபடாத பக்ஷத்தில் இன்று நாம் வாழ்வதே இயலாத காரியமாக ஆய்விடும் அல்லவா. உதா ரணமாக சூரியன ஒருநாள் விடுமுறை வாங்கிக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். உலகின் நிலை என்னவாகும் என் பதைக் கற்பனை செய்து பார்த்தால் புரியும்! அக்னி சுடுவ தில்லை என்று வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்தால, அப்பு றம் சமையல் ஏது—சாபபாடுதான ஏது! இப்படிப் பூதங்கள் ஐந்தும் தத்தம் இச்சைப்படி போகாமை பரம்பொருளின ஆக் ஞைக்குப பயந்தேதான்" என்று விடை பகருகின்றான் கால தேவன். வானத்தில் எண்ணற்ற நக்ஷத்திரங்களும், கிரகங் களும் சுழன்று கொண்டிருக்கின்றன. அவற்றிற்குக் குறிக் கப்பட்டுள்ள முறைப்படி அந்தப் பாதையைத் தவிர்த்து வேறு வழிகளில் அவை அசைய ஆரம்பித்தால், இன்றைய முறை யற்ற உலகத்தில் நடக்கும் கணக்கற்ற விபத்துக்களைப் போல் வான வெளியிலும் விபததுக்கள் நிகழ வேண்டியதுதான! இப்படி விந்தையான செயல்கள் நிகழாதவாறு முறையான வாழ்க்கைக்கு வழி வகுத்துள்ளது பரம்பொருளேயாகும். இதே கருத்தைத் தைத்ரீய உபநிஷத ஆசிரியரும் கூறுகிறார். இம் மந் திரத்தில காலன் பஞ்சமன் எனக் குறிபபடப்படுகிறான். இந்தி ரன், சூரியன், அக்னி, வாயு இவர்களைத் தவிர ஐந்தாவதாக வருபவன் காலன. ஏனவே, அவன் பஞ்சமன என அழைக் கப்படுகிறான்.

நான்காவது மந்திரத்தில் பரம்பொருளைப் பற்றிய ஞானத் தை இந்தப் பிறவியிலேயே அடைய வேண்டும் என்பது வலி யுறுத்தப்படுகிறது. "எவனொருவன் இப்பிறவியிலேயே பரம் பொருளை உணருகிறானோ, அவன் உலக பந்தங்களிலிருந்து விடுபடுகிறான். இப்படி உணர முடியாதவன மீண்டும் மீண்

---

தந்தைதாய், மனைமக்கள, தம்முறவர், நண்பரென,
எந்தையருள் கோலங்கொண்டு, எய்துவதோர் அற்புதமே!

டும் இங்கு பல பல உடல்களில் புகுநது பிறவிச் சுழலில் சிக்க நேரிடுகிறது'' என்று கூறுகிருன் காலன்.

இருள் இருக்குமிடத்தில் ஒளி இல்லை. ஒளி இருக்குமிடத்தில் இருளும் தங்க முடியாது. அறியாமை அகலாத மட்டும் ஞானப்பிரகாசம் உதிக்காது. ஞானமும், அக்ஞானமும் சேர்நது வாழ முடியாது. அறியாமையின் காரணமாக நாம் நம்மை,மனததைப்புலன் களுடன்ஒன் றுபடுத்திக்கொண்டு, 'நான்' என்ற ஆணவததை மையமாகக் கொண்ட இபபநதத்திலேயே உழன்று கொண்டிருக்கிறேம். இந்தப் பிறவியிலே இறையுணர்ச்சி ஓங்கி ஆத்மாவை அறிந்து அதனை உணரும் அனுபவம் பெறுவதைக் காட்டிலும் சிறந்த பேறு மனிதனுக்கு வேறு ஏதும் இல்லை. அகங்காரத்தின் காரணமாக 'நான் என்று தேகத்தினிடம் வைத்திருக்கும் அபிமானம் நீங்கி, ஆத்மாவே நான என உணர்ந்து, இவ்வாத்மாவும் எங்கும் வியாபகமாகவுள்ள பரமாத்மாவும் ஒனறே எங்கும் நிறைநத ஒன்றே என்ருலும் 'நாருக' விளஙகுகிறது எனபதை அறிவதைக் காட்டிலும் சிறந்த பேறு வேறு ஏதும் இருக்கக் கூடுமோ? இபபடி ஆத்ம தரிசனம் பெற்றவன மீண்டும் பிறவாத பெரும் பதத்தைச் சென்றடைகிருன. கனவிலிருந்து விழித்த பின் கனவில கண்ட செயலை மீண்டும் தொடர்ந்து செய்வாருளரோ? அஞ்ஞான உறககம் எனும் கனவிலிருந்து ஆத்ம சாக்ஷாத்காரம் எனும் விழிபபைப் பெற்றவர்கள் மீணடும் பிறப்பு இறப்பு எனும் அஞ்ஞான கனவுக்குத் தொடர்புள்ள செயல்களில ஈடுபடுவார்களோ?

இத்தகைய ஞானத்தை இந்தப் பிறவியிலேயே பெருதவன் மீண்டும் இம்மண்ணுலகத்திற்குத் திரும்பி வர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. 'நான', 'எனது' எனும் அகங்கார மமகாரங்களால் கட்டப்பட்டு, எல்லாமாய் நிற்கும் பரம்பொருளைக் காணுது ஆணவத்தினுல் மறைக்கப்பட்ட கணனுடையவர்கள் மீணடும் மீண்டும் பல பிறவிகள் எடுக்க நேரிடுகிறது. சுருதித்தாய் தன புதல்வர்களாகிய நம்மீது கொண்ட அன்பினுல இததகைய அவல நிலைக்கு நாம் ஆளாகுதல் கூடாது

---

வீடுபெற்ருர் செய்தி, விரும்பிக்கேட் கின்றமக்கள்,
வீடுபெறு சாதனையை, வேட்டலிலர் : என்னிதுவே?

என்று கருணையுடன் நமது லட்சியத்தை ஈண்டு சுட்டிக் காட்டு கிருள். இம்மானிடப் பிறவியே ஞானனுபவம் பெற ஏற்றது. மண்ணுலகத்தில் தான் பிரம்மானுபவத்தை தெளிவாகப் பெற்று அனுபவிக்க முடியும் என்பதை அடுத்து வரும் மந்தி ரத்தில் வலியுறுத்துகிருன் காலதேவன.

"யதா² தர்ஸே ததா²த்மனி யதா³ ஸ்வப்னே ததா²பித்ருலோகே!
யதா² ப்ஸு பரீவ த³த்ருயே ததா³ கந்த⁴ர்வ லோகேசசா யாதப
யோரிவ ப்ரம்ஹலோகே !!

மண்ணுலகில் கண்ணுடியில் பிரதிபிம்பத்தைப் பார்ப்பது போல பிரம்மத்தைத் தெளிவாகப் பார்க்கலாம். பிதருக்களுடைய உலகில் கனவில் காண்பது போன்றும், கந்தர்வாகளுடைய உலகில் தண்ணீரில் பார்ப்பது போன்றும் காணலாம். பிரம்ம லோகத்தில் இருளிடத்து ஒளியைக் காண்பது போனறு தெளி வாக நோக்கலாம். இதுவே இம்மந்திரத்தின பொருள. நம் முகத்தைப் பார்க்க வேண்டுமானல கண்ணுடியில் பார்க்கி ரோம். கண்ணுடியில் பிரதிபிம்பத்தை நாமே நனகு பார்ப்பது போன்று பிர்ம்மானுபவத்தை, பிரம்ம சாக்ஷாத்காரத்தை மண் ணுலகததில் தெளிவாகப் பெற இயலும். கனவில தெளி வற்ற, உருப்புரியாத வடிவத்தைப் பார்பபது போன்றது பித்ரு லோகத்தில பிரம்ம சாக்ஷாத்காரம் பெறுவது. நீரில் காணும் வடிவம் சலனமுடையதாக நிலையற்றதாக இருக்கும். ஒளி தனியாகவும் பிரகாசமாகவும் புலனுகிறதே அபபடியே பிரம்ம லோகத்தில் பிரம்மானுபவம் பூரணமாகவும் தெளிவாகவும் சித் திக்கும். புறப்பார்வைக்கு இம்மந்திரத்தின் பொருள் தெளி வாகப் புலப்பட்டாலும் இதற்கு உட்பொருள் நிரம்ப இருக்கி றது. இதற்கு முந்திய மநதிரத்தில் மனிதப் பிறவியின் பெரும் சிறப்பு தன்னே, தன் சுய ஸ்வரூபத்தை அறிவதே ஆகும் என பது வலியுறுத்தப்பட்டது. பூவுலகில் மனம், இந்திரியங்கள் இவற்றுடன் கூடினவர்களாக, புலன் நுகர்ச்சிக்கு இடந்தரும் பொருள்களுடன் வாழும் நம் அனுபவத்திற்கும், கனவு உல கில் நாம் பெறும் அனுபவத்திற்கும் வேறுபாடுகள் இருப்பதைக் காண்கிரேம். இப்படியே இவ்வுலகத்திற்குப் புறம்பான பிற

---

உயர்நிலையை ஓர்ந்தும், உலகமயக் கத்தால்,
அயர்ந்தே தெளிவிழத்தல், ஆழ்கலியின் சாதனையே.

உலகங்களும் அங்குள்ள அனுபவங்களும், இவ்வுலகத்தினின்றும் வேறுபடுகின்றன. பித்ருலோகத்தில் மனமும் புத்தியும் கொண்ட சூக்ஷ்ம சரீரம் மாத்திரம் இருக்கிறது ஸ்தூல சரீரம் இல்லை. இங்கு நாம் ஸ்தூல ஸரீரத்துடன் பெறும் அனுபவங்களுக்கும் இச்சரீரம் இல்லாமல் ஸூக்ஷுமத்தில் அனுபவிக்கும் தனமைக்கும் நிச்சயமாக வித்யாசம் இருக்கிறது. இவ்வகையிலேயே கந்தர்வர்களாகிய தேவர்களின் உலகத்திலும் பிரம்மலோகத்திலும் நாம் பெறக் கிடக்கும் அனுபவம் நிச்சயமாக வேறுபட்டே இருக்கும். இந்த மண்ணுலகத்தில் தேகத்துடன் ஜீவன் வாழுங் காலத்தில், சாதனங்கள் பல செய்து மனம் தூய்மை அடைந்து பரம்பொருளைப் பற்றிய பூரண அறிவு பெறுகிறது. மனத்தையும், புத்தியையும் கடந்து தாசகன் ஆத்ம தத்துவத்தை நேருக்கு நேர் காணும் வாய்ப்பு பெறுகிறான். 'நான்' 'நான்' என்று சொல்லும் அகங்கார உள்ளுணர்வு மனத்தையும் புத்தியையும் தாண்டிய சமயத்தில் தன் எதிரே ஆத்ம தத்துவத்தை நேருக்குநேர் சந்தித்து, நான் எனும் தனித்தன்மையை இழந்து, அங்கு உணரக் கூடிய பிரம்மானுபவத்தில் ஒன்றிவிடும். கண்ணாடி எதிரே நின்று நம்மை நாமே தினம பல முறைகள் பார்ததுக் கொள்கிறோம்; அவ்வாறு பார்க்கையில் எதிரே இருப்பது நம்மில் அந்நியமானது என்ற உணர்வு நமக்கு எப்படி ஏற்படுவதில்லையோ அப்படியே ஆத்ம தரிசனம் ஏற்படுங்கால் ஆணவம்—அகங்காரம் அழிந்துவிடுகிறது. இப்படி உணர்ச்சி பூர்வமான அனுபவம் இம்மண்ணுலகத்தில் தான் நமக்குக் கிட்டுகிறது. எனவேதான் இப்பூவுலக அனுபவத்தைக் 'கண்ணாடியில் காண்பது போல' என்று விளக்குகிறான் காலன். இந்த ஒரு தத்துவத்தைப் புரிந்து கொண்டால் இதர பூமிகளில் நமக்கு ஆத்மானுபவம் ஏற்படக் கூடிய விபரத்தைக் காலன் விளக்கி இருப்பது நம்மால் நன்கு அறிந்து கொள்ள முடியும். பித்ருலோகத்தில் கனவில் காணும் காட்சி போலத் தோன்றி மறைவதாகவும், கந்தர்வ லோகத்தில் நீரில் காணும் பொருளை ஒப்ப சலனமுடையதாகவும் இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. இதற்கு விளக்கம் தேவையில்லை யல்லவா!

---

முத்திச் சுகத்தை, மோந்துகொளப் பின்வாங்கிப்,
பத்திகர்ம யோகமென, வாய்பறைதல் பாவமரோ.

# தெய்வ ரகசியம்

(ரஸபதி)

விண்ணளாவிக் கயிலை விளங்குகிறது. அடியார்களும் வானவர் முனிவர் கூடியுளர்.

அமுதக் கடலே! அருள் வெள்ளமே! சுத்த சித்த அத்தனே! நாதவேத போதனே! அடைக்கலம் பெரும! அடைக்கலம் என்று, சிவத்தை ஆராதிக்கின்றார் சிலர்.

மாதேவீ! சாம்பவீ! சதாநந்தீ! நித்ய கல்யாணீ! ஆரணீ! அகில உலக காரணீ! அடைக்கலம் அம்பா! அடைக்கலம் என்று, வீரிட்டுக் கூவி விண்ணப்பிக்கின்றார் சிலர். பரம நிஷ்டையில் ஆழ்ந்து பயனடைகின்றார் பலர்.

அவ்வமயம் பார்த்து, எம்மான் குமரன் எழுந்தான். கலகல என்றது திருவடிச் சிலம்பு. கிண்கிண்கிண் என்றது கிண்கிணி. எங்கே குமரன்? எங்கே என்று, ஏக குரல்கள் எழுந்தன.

அதோ, அதோ என்றனர் சிலர். ஆம். பரிதியின் தேரில் பளபளக்கிறது திருவுருவம். பார்த்து மகிழ்ந்தனர் பலர்.

ஆ! எங்கே? அங்கேயும் இல்லையே! இதோ, இதோ, சந்திர மண்டலத்தில் இருக்கின்றான் என்றனர் சிலர்; ஆம். அதைப் பலர் அறிந்தனர். தற்பர முருகா! என்று, போற்றி மகிழ்ந்து புளகித ராயினர்.

என்ன ஆச்சர்யம்! எத்தனை முருகன்! எத்தனையோ ஊர்திகளில் ஏறி, எங்கும் பவனி வருகின்றானே! ஐம் பூதங்களில் அவன் ஆடல். சத்யலோகம், வைகுந்தம், தேவலோகம், மேல் ஏழுலகம், கீழ் ஏழுலகம், ஏக காலத்தில் எங்கும் நடமாடுகின்றான். வெள்ளி மலையில் ஏறுகிறான்; அடுத்து, விந்திய மலையில் காணப்படுகிறான். என்ன அற்புதம்!

இறுதியில் செய்தி என்ன? கந்தகிரிக் குகையுள் புகுந்தான்; காளத்தியின் அண்மையில் உள்ள விண்ணளாவிய ஒரு மலையில் வெளிப்பட்டான்.

* * * *

பற்றற்ற கயிலர், ஒரு பரம ஞானி. அவர் அந்த இடத்தில் தவம் செய்து இருந்தார். கந்த வேளைக் கண்டார். களித்தது மனம்.

---

அளவிறந்த குற்றம் அகத்தில் இருக்க
களவிறந்த தெய்வ அருள் காணுவதும் உண்டாமோ?

எழுந்தார். எட்டுறுப்பும் நிலம் தோய விழுந்தார். ஆறெழுத்துப் பெயராளா! அருளார் கோலத் திருவாளா! புனித மெய்ம்மைப் பொருளாளா! இன்ப முதலே! இறைவா! இப்படியும் ஒரு அருளாடலோ ஐயா!

பாதலத்தில் பரமேசனை, ஆத்மார்த்தமாக ஆராதித்தேன். ஒருநாள் பரனது எடுப்பான திருவுரு, தம்பாகாரமாக எழுந்தது. உயர்ந்த அது, மேலும் மேலும் உயர்ந்து கொண்டே இருந்தது. அடியேனும் தொடர்ந்தேன். உயர்ந்த இம் மலையை ஊடுருவி, உச்சியில் விளங்கி ஒளிர்ந்தது.

நிலவுலகர்க்கு அருள, இப்படியும் ஒரு திருவருளோ என்று வியந்தேன். இங்கேயே சிவத்தை நினைந்து இருந்தேன்.

எதிர்பாரா நிலையில், நீரும் இங்கு எழுந்தருளினீர்! சத்துள்ள இடத்தில் சித்து; சித்துள்ள இடத்தில் இன்பம். பெரும! என்ன அற்புதம்!

பாலர் ஆன உமது கோலத்தை, வந்து சேவிப்பார்க்கு வாழ்வருள, என்றும் நீர் இங்கு இரும்! என்று கபிலர் இறைஞ்சினார். புன்னகை செய்தான் புனித முருகன்.

கபிலா! சிவம் இருக்கும் இப்பதியில், யாமும் இருப்பம். இங்கு வினய வழிபாடு செய்பவருடைய வினையின் ஆட்சி வீழ்ந்து விடும். அதனால் இம்மலை, இன்று முதல் திருவேங்கடம் என்ற பெயர் பெறும். (வேம்-பாவம் : கடம் - எரித்தல்.) மறைகள், இங்கு நம்மை, வேங்கட சுப்புராயர் என்று, குதுகலம் எய்திக் கொஞ்சிப் போற்றும் ; அறிந்துகொள் என்று அருளிய அறுமுகன், ஏக மங்கள விக்ரகமாக எழுந்தருளினன்.

* * * *

விவரம் அறிந்த விண்ணவர்கள், விரைந்தனர். திருவேங்கடாசல பதியான திருமுருகனை, ஏத்திப் போற்றி இறைஞ்சினர்.

மூல விக்ரகத்தில் சிவம்; சிவத்தில் சிவை; சிவையில் சிவசுப்ரமண்யம்; இப்படிச் சேவை தரும் அற்புத மூர்த்தம் அது.

அந்நாளில், காங்கேய சிவாசாரியார், பாவகி சிவாசாரியார், சுரேச சிவாசரியார், குருபர சிவாசாரியார் எனும் நான்கு ஆதி

---

அன்புடைய தொண்டர்க்(கு) அணுக்கனும் எம்பெருமான்,
இன்ப அருள் வெள்ளத்(து) எமையழுத்தல் என்றேயோ?

சைவர்கள், அத்தலத்தில் ஆதி அர்ச்சகர்களாக அமர்ந்தனர். வழிபாடு வளர்ந்தது. வாழ்ந்தது உலகம். பலகாலம் இங்ஙிலை.

குருபர சிவாசாரியார் துணைவி சுசீலை, உத்தமக் கற்பால் உயர்ந்தவர். பரம பக்தை. ஒற்றுமையான தம்பதிகளின நல்லற இல்லறம் நடந்தது. பிறநதது ஒரு பிள்ளை.

சாதகம் ஆதிய நடந்தன. சம்வர்த்தனர் என்று பெயர். ஐந்து வயதில் உபநயனம். தந்தையே மைந்தர்க்குக் குருவா யினர். கற்கத் தக்கவைகளை முறையே கற்பித்தார் தேறிய மைந்தர்க்கு, நலம்தரும் சிவதீட்சை நடந்தது.

பொலலாத காலம் சொல்லிவிட்டு வருவது இல்லை. குருபர சிவாசாரியார்க்கு, ஒரு நாள், உலகம் இருணடது. உடல் தளர்ந்தது. சிவசிவ சிவசிவ என்று உருவேற்றிய படியே, உடலிருந்து பிரிந்தது உயிர்.

இயற்கை எய்திய அவர் திருமேனிக்கு, எல்லா மரியாதை களும் நிகழ்நதன. இறுதிச் சடங்கு நடந்தது. குருபூசையை யும் அன்பர்கள் கொணடாடினர். அது வரை தீர்நதது அவர் செய்தி.

* * * *

மற்றைய குருக்கள்மார் மூவரும், புனித வேங்கட சுப்புவைப் பூசித்தனா. சம்வர்த்தனர் இளம்பிள்ளை. அதனுல், சிவபூசைக்கு அவரைச சேர்த்திலா. எனினும், உரிய ஊதி யத்தை உதவினர்.

திருநீறு, உருத்திராட்ச மாலை, ஐநதெழுத்து ஜபம், ஆகம ஞானம், மெய்யுணாவு, ஆசார சீலம், அடக்கம் எனனும் அருங்குணம் முதலியன, வயதிற்குத் தக்கபடி சம்வர்த்தன ரிடம் வளாந்தன.

அங்ஙிலையிலும், பூசை முறையை, மூனறு குருக்கள் களும் கொடுக்க முரணினர். தந்தை வழிபாடு செயதார். அவ் வுரிமையை, என மைந்தனுக்குத் தருக எனறு அவர் எங்களிடம் அறிவித்தது இல்லை. உபகார ஊதியததை, இது வரை இரககத்தால அளித்தோம். இனி அதுவும் கொடோம் என று, கோர ஆரவாரம் செய்து கொககரித்தன்ா.

---

ஆசையாம் பாசத(து) அழுத்தாமல, ஈர்த்தெம்மைக்
கூசாத மோனம் கொளவைத்தல் எனறேயோ?

•

அவர்கள் மன நிலையை அறிந்த சம்வர்த்தனர், அறுமுக குருபரா! முருக திவாகரா? வேங்கட சுப்பூ! உன் திருவுளம் போல் ஆகட்டும் என்று, அமைதி யடைந்தார்.

தாய் சுசீலை மனம், இது கண்டு தளர்ந்தது. என்ன செய்வது என்று ஒன்றும் தெரியவில்லையே. ஒருநாள் மாலை நேரம். முதல்வன் திருமுன் வந்தாள். தன் கணவர் தொட்டு ஆராதித்த தூய மூர்த்தியை, இன்று தன் பிள்ளை வழிபட உரிமை இல்லை. நினைத்தாள. கலகல என்று கண்ணீர் வழிநதது.

அகில உலகையும் ஆண்டவனே! கதியற்ற எங்களைக் கடைக்கணிக்க மாட்டாயா? அடியேன் மகனை ஆளாக்கிக் கொள் ளாயா? உம்மைத் தவிர எமக்கு வேறு கதி ஏதையா! என்று பொருமி வீழ்ந்தாள். எழுந்து தொழுதாள். இல்லம் திரும் பினுள்.

அன்று இரவு, உணவு அருந்திலள். உறக்கம் துறந் தாள். சிவகுமரா! உமாசுதா! என்று முனகியபடியே இருந்தாள்.

விடியற் காலம். நான்கு மணி. பொய்த்துயில் சிறிது போர்ததது. ஒளி மயமான திருமேனியுடன், கனவில் வேங்கட சுப்பு, அவள் முன் காட்சி யாயினர்.

சுசீலா! நின் எண்ணம் நாளை நிறைவேறும்! என்று அருளி, திடீரென்று உருவம் கரந்தான் திருக் குமரன்.

திடுக்கிட்டு விழித்தாள். வியர்த்தது மேனி. என்ன அதிசயம்! என்னையும பொருளாக்கி எம்பெருமான வந்தானே! அரஹர குமரா! அரோஹர என்று ஆநந்தக் கண்ணீர் பெருக எழுந்தாள்.

காலைக் கடனை முடித்தாள். நீராடினுள். நியதி செய் தாள். அதே நேரத்தில், வைதிக கோலத்தில் வந்து வணங்கிய சம்வர்த்தனரை, வாரி எடுத்தாள். அகமும் முகமும் மலர, ஆசி செய்தாள். படபடத்தது அவள் திருமேனி.

அம்மா! ஏன் உங்கள் திருமேனி இப்படி ஆடுகிறது? என்ன நிகழ்ந்தது?

காரணம் இருக்கிறது என்று எழுந்தது ஒரு குரல்.

---

எண்ணறநத மக்களைத், தம்தவத்தால் ஈர்ததணைத்துக்,
கண்ணிறைந்த தெய்வஇயல காட்டினரும் உண்டம்மா!

யார் அது? திடுக்கிட்டது மனம். இருவரும் வீதியை நோக்கினர். ஆம். அவ்வளவு காலையில், அந்நாட்டு அரசர் அல்லவா வந்திருக்கிறார்.

வருக அரசே! என்ன இது! எங்களையும் ஒரு பொருளாக்கி, இங்கு விஜயம் செய்கிறீர்களே!

சம்வர்த்தனரே! தங்களிடத்தும், தங்கள் தாயிடத்தும், எம்பெருமான் திருவருள், பரிபூர்ணமாக இருக்கிறது. வழிபடும் உரிமையை வாங்கித் தா என்று, கனவில் வந்து வேங்கடசுப்பு அடியேற்குக் கட்டளை யிடுகிறார். உங்கள் இருவராலும், பேறுன அச்சேவையை எளியேன் பெற்றேன என்று, கண்மழை பொழிந்தார் காவலர்.

பெற்ற தாயின் பிரார்த்தனை, இப்படிப் பிரதி பலிக்கிறது என்று, சம்வர்த்தனர் அறிந்தார். தாயைப் பணிந்தார். அரசரைத் தொடர்ந்தார்.

பக்தவற்சலா! பரம் குமரா! ஏழை பங்காளா! விமல உமது திருவருள், எவ்வளவு விரைந்து செயல படுகிறது எனறு, எண்ணிச் சுசிலை கண்ணீர் சிந்தினள்.

அரசருடன் சம்வர்த்தனர் வருவது கண்டு, அர்ச்சகர்கள் மூவரும் அஞ்சினர். மனனர் பெருமா! வருக எனறு வரவேற்றனர்.

தந்தையின் வழிபாட்டு உரிமையை, தனயர்க்குத் தருவதில் தடை ஏன்? என்ருர் தரணிபர்.

தாங்களே விஜயம் செய்து அறிவித்த பிறகு தான், எங்கள் செயல் தவறு என்று அறிகிருேம். இன்றே, இப்போதே அவ்வுரிமையை அளிக்கிருேம் என்று, ஒரு வாயாக மூவரும் ஓதினர்.

அன்றைய வழிபாட்டிற்கு உரிய திரவியங்களை, அரசர் அமோகமாக வரவழைத்து அளித்தார். விதிப்படி சம்வர்தத னர், வழிபாட்டை விரிவாகச செயதார். அன்று பெருமான் திருமேனி, ஏகமான ஜோதிமயம். மன்னர் முதல் யாவரும், பக்தி மிகுந்தனர். பரவசம் எய்தினர்.

அனறு முதல் சம்வர்த்தனர், தந்தை ஸ்தானத்தை நிரப்பினர். தாயின உளளம் மகிழ்ந்தது. இப்படியே நலமான வழிபாடு, பல ஆண்டுகள் நடந்தன.

---

திருவண்ணுமலையில 15-8-62 புதன்கிழமை ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் விழாவின் விளக்கம் அடுத்த இதழில் காண்க.

திருவேங்கடத்திற்குக் கிழக்குத் திசையில், சிந்தாமணி என்று ஒரு சிறு கிராமம். அவ்வூரில் இருக்கிருர் நல்லம்மான். அவரைப் போய்ப் பார்த்து வரவேண்டிய அவசியம் நேரிட்டது. அதனுல் சம்வர்த்தனர், தனக்கு வழிபாட்டு முறையல்லாத காலம் பார்தது, புறப்பட்டார். நாள்பல நடநதார். காதம் பல கடந்தார். போகிருர். போய்க் கொண்டே இருக்கிருர்.

மாலைப் பொழுது. அரண்ய நதிக்கும், குசஸ்தலத்திற்கும் இடையில் உளது ஒரு பெரிய வனம்.

அந்தி நேரம். சந்தியா வந்தனம் செய்ய வேண்டும். காலத்தில் கடமையைச் செய்யத் தவருத அவர்க்கு, எங்குத் தேடியும் நீர் அகப்படவில்லை.

என்ன பாபம்! ஒரு குடம் நீர் கிடைத்தாலும் போதுமே! ஆண்டவனே! இது எனன சோதனை! என்று வருந்திக் கண்ணீர் வடித்தார்.

எதிரே ஒரு சிறுவர், எங்கிருந்தோ வந்தார். சர்மாவின் எதிர் நின்ருர். கட்டழகுத் திருமேனி,

ஐயா! எம் தயவை எல்லாரும் எதிர் பார்க்கினறனர். வருக வருக எனறு வருகைப் பருவம் பாடுவர்; எல்லாம் வெறும் போலித்தனம். அனபு காட்டுகின்றனரே என்று அணுகினுல், அயலார்போல் அகன்று விடுகினற அதிசயத் தையே காண்கிறேன். அதனுல் எவரையும் விரும்பவில்லை எமது மனம். அனபுடையார் தாஙகள் என்று அறிகிறேன், என்னை யேற்றுக் கொள்ளுங்கள்! எது வேண்டு மாயினும் செய்கிறேன என்ருன், அந்த இளஞ் சிறுவன்.

பிள்ளையின் சொற்கள், சர்மாவின் உள்ளத்தை உருக்கி யது. பிள்ளாய்! அப்படியே செய்வம்! சூரியன் மறைந்தான். சந்தி செய்ய வேண்டும்! இங்கே எங்கேனும் நீர் இருக்கிறதா பார்! என்ருர்.

இதோ அரை நொடியில் வருகிறேன் என்று, ஓடினன் சிறுவன. சொன்னபடியே வெகுவிரைவில் திரும்பினன். சர்மா வைப் பார்த்து, கலகல எனறு நகைத்தான்.

ஐயா! அண்மையிலேயே இருககிறது ஒரு சிற்ருறு. அங்கே போம். அனுட்டானத்தை நிறைவேற்றும்! நீர் வரும்

---

மோனஞ்சார் முத்திரையால், முன்னீர்த்தே எம்மவரை
ஞானத்தர் ஆக்குகின்ற நாதனருள் என்றுறுமோ?

வரை இங்கேயே நிற்கிறேன் என்று, அவரை அவசரப் படுத்தினன்.

என்ன வியப்பு! வெகு தூரம் முயன்றேனே! நான தேடிய போது இல்லாத ஆறு, எப்படித் திடீரெனறு எழுந்தது அதை யும்தான் பார்போமே எனறு விரைநதார்.

என்ன ஆசசர்யம்! சிலுசிலு எனறு செல்கிறது சிற்ருறு. மகிழ்ந்தது மனம். வாய் சிறுவனே வாழ்த்தியது. துயமை செய்தார். ஐபதபங்களை முடித்தார். சிறுவன இருக்கும திசை நோக்கித திரும்பினுர்.

எங்கே அவன? கண்ணிற்கு எட்டிய தூரம்வரை தேடி ஞர். அகப்படவில்லையே! எங்கே சென றிருபபான? எண் ணுதும் எண்ணியது, புண்ணியம் மிகுந்த அவர் புனித மனம்.

எதிரில் ஒரு சரக்கொன்றை. அதன அடியில திருவேங் கடவர், எடுப்பான கோலத்தில் இருக்கிருர்.

என்ன இது; கனவா நனவா காண்பது நான்? விழி இமையாது நோக்கினுர். ஆம். வேஙகடசுப்புதான. வியந்தார். விரைந்தார். திருவடிகளில் விழுந்தார்.

அத்தா! அருளரசே! இது எனன கூத்து? இங்கு எப்படி வந்தீர்? பேதையே! நீ எனனைப் பிரிய மனம் துணிவாய்; உன்னைப் பிரிந்திருக்க இயலவில்லையே எனறு அறிவிககும் ஆடலோ ஐபா இது? எனறு அலறினுர்.

அனபா! நீ திருவேஙகடததை விட்டுப் புறபபட்டது முதல், தூய நீ எம்மைக் காணுதபடி, உனனைத் தொடர்ந்து வந்தேம். தண்ணீர் வேண்டும் எனறு தவிததாய். உதவ நினைத் தேம்! சிறுவன ஆயினேம். ஏவிய வேலால், ஒரு ஆற்றை உண்டாக்கினோம். இவ் வரலாறு எவர்க்கும் என்றும் நினைவில் இருக்க, இனி இங்கேயும் இருப்பம யாம்!

இனறு முதல், திருவேங்கடத்தில் உள்ள சிவசிததின் முருக சொருபம், திருமால் உருவாய்ச் சேவை தரும். யாம் தோற்றுவிதத இச்சிறறு, இனி பாலநதி என்ற பெயாபெறும்.

ஓர் உருவும் ஒரு பெயரும் இயல்பில் இல்லாத யாம், அன்பர்கள பொருட்டுப பல உருவும் பல பெயரும் கொள் வம். அவைகளுள் பதினறு திருவுருவைப பாரத்தவர்கள், அரிய பெரிய தவத்தினர். அவைகளுள் ஒனறு, ஸ்ரீ பால சுப்ரமண்யத் திருவுருவம்.

இது, பிரமனைப் பிரணவப் பொருள் கேட்ட காலத்தில் கொண்டிருந்த திருக்கோலம். அன்பனுன உன்னை யாட் கொண்ட இப்பதி, இனி ஆண்டார் குப்பம் எனும் பெயர் பெறும். இதை யடுத்த காட்டா ஊரில், உரோமசர்க்கு உப தேசித்த கோலம் கொண்டுளம்! என்று அருளியபடியே, சரக்கொன்றை யடியில், திவ்ய மங்கள விக்ரமாகி விமலன் விளங்கினன். வானவர் மலர் மழை பெய்தனர். சம்வர்த்த னர் கண்கள், இன்பக் கண்ணீரை இறைத்தன.

பெருமா! இன்றுமுதல் உம்மை என்றும் பிரியேன் என்று ஆணையிட்டார். அதன்படி, ஆண்டார் குபபத்திலேயே தங்கிஞர். ஆண்டவனைத் தொடர்ந்து ஆராதித்தார். விவரம் அறிந்த சுசீலை, அங்கு விரைந்து வந்து சேர்ந்தாள்.

எம்மானைச் சேவித்து இருந்தாள். பலகாலம் இருவரும், ஸ்ரீபாலசுப்ரமண்யப் பரமனை வழிபட்டு இருந்தனர். அதன் பயனுக, தாய் முன்னும், சேய் பின்னுமாக, ஒரு நாள் இறைவனது நிரதிசய இன்ப வாழ்வில் இணைந்தனர்.

திருவேங்கடத்தில் ஆழ்வார்கள், "ஏறு ஆளும் இறையோ னும் திசைமுகனும் திருமகளும், கூறு ஆளும் தனிஉடம்பன்" என்று, பெருமானைச் சிவ விஷ்ணு சொருபமாகச் சேவிததனர்.

வைஷ்ணவி, கௌமாரி எனும் இரு சக்திகள், இக்கோயி லில் ஆவிர்ப்பவிததுளர்; கோயில் கர்பபக் கிருகத் திருமதி லில், சிங்கங்கள் இருக்கின்றன. வெங்கடேசர்க்கு வெள்ளிக் கிழமையில் அபிஷேகம் செய்கிருர்கள். திருப் பரிவட்டம் 36 முழம்; அந்தக் கணக்கு சக்திகட்கே உரியது. அந்த ஆடையில் பச்சைக் கற்பூர மணம் பரிமளிக்கிறது. இத் தியாதி காரணங்களால், அது சக்தி க்ஷேத்திரந்தான் என்று கூறி உள்ளம் குளிர்ந்து, அன்பொடு சிலர் ஆராதிககின்றனர்.

அருணகிரிநாதர் அபபெருமானை, வேண்டவெருது உதவும் முருகனுகவே கண்டு, புனிதத் திருப்புகழ் பாடியுளர். இவ்வர லாற்றின்படியும், சிவமாய், சத்தியாய், திருமாலாய், திருப்பதி யில் முன்னிற்கின்ருன் முருகபிரான் என்று, உணர்ந்து மகிழ கிறது நம் உள்ளம்.

சிவம் வேறு, திருமால் வேறு என்று பேதம் பேசுவார் ஏதம் எய்துவர்; ஊனறித் தெய்வ நுட்பத்தை உணர்கின்ற மேலோர், அந்த அபேத நிலையறிந்து ஆநந்திக்கின்றனர்.

வாழ்க அந்தப் பெருமக்கள்!

# Disease of Litigation and Cure

Courts of Justice in our land, can fittingly be described as hospitals. They are the asylum of litigants. It has been said and truly enough, that of all diseases, the most distressing disease is litigation disease. The cure for the litigation disease is not available with ordinary doctors who treat the diseases of the body. It is only the Courts that can treat such diseases. It is a metaphysical disease, and if carefully attended to, the patient will be cured and permanently. If not it will prove to be hereditary infecting sons and grandsons, and it will run into the family for generations involving a lot of ruin for self and society

The High Court of Judicature at Madras has stood for 100 years till now, and generations of men have been helped to be saved from this dire disease to the extent of its capacity. Hence the present centenary celebration. In the ordinary hospitals, diseases are cured in many cases Even so, doctors are unble in many cases to cure all and some patients are allowed to rest in Eternal sleep. In the hospitals of the Court, prescriptions are manifold; the correct recipe for the case is often times not found and justice may be said to have failed in them. In numerous cases the recipe of truth is completely lost in between the struggle of the parties to establish their own private interests by what is not true. The Court's ultimate remedy is the finding of a Judge without conclusive materials to which finality is attached, somehow to end litigation.

It is in the experience of aged lawyers, that what is true is not always discovered and the reverse is not infrequently the case. Hence with all the efforts to establish the truth in Courts much greater effort at compromise may yield welcome results in the cure of this disease.

A due sense of righteousness, a due respect for the creation of human equanimity, a proper control of the impulse for striking at an alleged enemy, the sense of willing sacrifice which each has to make for the peace of society and a general effective sympathy for the sufferings even of the evil minded, will secure safe results in these hospitals of litigation.

Bakti is a warehouse of goodness. Beyond the Justice that Courts can give, there is a higher platform of Justice which takes into account the re-actions of forgotten good and evil done in prior times and births, and the fate of a case depends not merely on what had happened now, but is subject to the reaction of past lives and conduct. Practice of Bakti generates forces which neutralise even such past forces The decisions of courts are controlled by a Superior Dharma which must be the rule of law, and the only effectual method of influencing it, is the thought of God and doing Bhajan. Divine dispensation is always the ultimate justice of any case. Therefore, pray and do Bhajan. The Lord will decide in all justice and mercy. *Thiruppugal Mani.*

விண்ணாளும் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்!

Regd.No.M.5390 Amirthavachani ஆவணிமீ (1962 அமிர்தவசனி 14-5)

**Coffee**

**Ours for Quality**

RAW ROAST OR GROUND

**GANESH & CO., (MADRAS) PRIVATE LTD. MADRAS**

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

**A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.**

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 113




**குடை மார்க் பினயில்**

(சிறந்த கிருமி நாசினி)

*தயாரிப்பாளர்:*

**ஸ்பிரிட் வேர் ஹவுஸ்**

49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982

*விநியோகஸ்தர்கள்:*

**கார் & கம்பெனி**

1/6, செகின் லேன் பீச்,
சென்னை-1. டெலிபோன்: 22058

**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:**

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து சுபகிருது வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.

Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.